REGD M 4642

திராவிட நாடு

விலை அணா 2 | ஆண்டுசந்தா ரூ 7 | இலங்கை 15 சதம் | மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 25—7—48 | இதழ் [illegible]

"மந்திரி (ஏ) மாறச் செய்வோம்"

[ம. ச. பா.]

—✻—

"இந்தி மொழித் தமிழ்நாட்டில் விருப்பப் பாடம்"
    என்றுரைக்க, மந்திரியார் "மிகவும் ஆழ்ந்து
சிந்தித்தே இதைச் செய்தார்" என்று எண்ணி
    சிந்தைமிக மகிழ்ந்திட்டச் சிலகாலைக்குள்
"இந்திமொழித் தமிழ்நாட்டில் யாவருக்கும்
    இனிக்கட்டாய"மென்று இயம்பி விட்ட
மந்திரியின் மனப்போக்கை நினைத்தபோது
    மனங்கலங்கி அயர்ச்சியுற்றோம் சிறிதுநேரம்.

அயர்வடைந்தோ மாயினுநாம் அச்சம் நீங்கி
    அண்டவிடோம் பிறமொழியைத் தமிழகத்தில்
வயப்படோம் வருகின்ற மொழியினுக்கு
    வரிந்துகட்டி ஒருங்கியைந்து எதிர்த்தே நிற்போம்
துயர்பலவும் அடைந்திடினும் துச்சமென்று
    துளியேனுங் கலங்காது துணிவுகொண்டு
உயர்வுமொழித் தமிழுக்கு ஊறுசெய்ய
    உளங்கொண்ட மந்திரியே மாறச் செய்வோம்.

தேவமொழி மக்களுக்கு ஏன்

3-ம் பக்கத் தொடர்ச்சி

வதை எண்ணும்எவர்களும், இந்தக் கடுமையும் கொடுமையும் நிறைந்த மொழியை மாணவர்கள் தலையில் சுமத்தவே மாட்டார்கள்.

இனிச், சமஸ்கிருத அறிவு திறக்க முடியாத ஒரு மூட்டைக்குக்குள் அடங்கியிருக்கிறதென்று இராஜாராம் அவர்கள் கூறிய கருத்துஎன்ன என்பதனை ஊன்றி நோக்கும்போது, "திறக்கமுடியாதது" என்று கூறப்பட்டதும், உலகவழக்கழிந்தொழிந்து சிதைந்த மொழி என்று மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, அவர்களால் கூறப்பட்டதும், இறந்துபட்ட மொழி (Dead Language) என்று மேல்நாட்டுப பேராசிரியரான டாக்டர் கால்டுவெல் அவர்களால் கூறப்பட்டதும், வேறு வேறு சொற்களில் கூறப்பட்ட போதிலும், அடிப்படைக் கருத்து ஒன்றாகவே அமைத்துக் கூறப்பட்டதென்பதை அறிவுடைய எவரும் மறுக்கமாட்டார்கள்.

> திறக்க முடியாதது — உலக வழக்கழிந்தொழிந்தது— இறந்துபட்டது

என்ற இம்மூன்று சொற்றொடர்களையும் ஒப்ப நோக்கிப் பார்ப்பவருக்குச் சொல் அமைப்பில் வேறுபாடு காணமுடியுமேயன்றிக், கருத்தமைப்பில் தினைத்துணையும் வேறுபாடு காணவேமுடியாது. எனவே, திறக்கமுடியாமல்—உலக வழக்கழிந்தொழிந்து — இறந்துபட்ட சமஸ்கிருதமொழியை இளமாணவர்களின் மூளையைத்திறந்து அதற்குள்புகுத்தி அவர்களுடைய அறிவை அழித்து, அவர்களின் வாழ்க்கையை உலகிற்குப் பயன்படாது செய்யும் 'இறப்பு' வேலைக்கு இன்றைய சர்க்கார் இடமளிக்கக்கூடாதென்பதே எமது விருப்பமாகும்.

சமஸ்கிருதத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் நாகரிகம், ஒருவேளை தமிழ் நாகரிகத்தை விரும்பாதவர்களுக்குத் தேவைப்படலாம். தமிழ் மக்களுக்கென ஒருதனி மொழியும், அம்மொழியில் மிளிரும் ஒப்புயர்வற்ற நாகரிகமும் இருக்கும் போது, சமஸ்கிருத காலத்துக்கு முன்பிருந்தே நாகரிகவாழ்க்கையை மேற்கொண்டுள்ள தமிழ் மக்களுக்குச், சமஸ்கிருத நாகரிகம் எதற்கு என்பதும், அதனை இப்போது நாட்டில் பரப்பும் முயற்சி ஏன் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பதும் தான் விளங்கவில்லை.

இனிச், சமஸ்கிருதம் 'தேவமொழி' என்று கூறப்பட்டுவிட்டதால், அத் தேவமொழியில் காணப்படும் நாகரிகமும் தேவர்களுக்குரிய நாகரிகமாக இருக்கமுடியுமேயன்றி, அது, மக்களுக்குரிய நாகரிகமாக இருக்க முடியாது. எனவே, மக்களுக்குரிய நாகரிகம் மக்களால் பேசப்படும் மொழிகளிலேயே வேண்டிய அளவு இருக்கும்போது, மக்களால் பேசப்படும் வாய்ப்பை இழந்த தேவமொழியினை—சமஸ்கிருத நாகரிகத்தை நாட்டில் ஏன் பரப்பவேண்டும்? இனி, ஒருவேளை, தேவமொழியான சமஸ்கிருதத்திலும் சில நல்ல நாகரிகங்கள் இருக்கின்றன; அவற்றை மக்கள் தெரிந்துகொள்வது நல்லதுதான் என்று வைத்துக் கொண்டாலும், அது, தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தேவைப்படாத ஒன்றாகும். தமிழ் மக்களுடைய நாகரிகம், பிறமொழியாளர்கள் கண்டு பெருமைப்படக் கூடிய அளவிலும், அவர்களுக்கும் அந்த நாகரிகத்தைப் பின்பற்றவேண்டுமென்ற ஆர்வத்தை உண்டாக்கக் கூடியமுறையிலும் அமைந்திருக்கும் போது, சமஸ்கிருதத்தில் காணப்படும் நாகரிகத்தைத் தமிழ் மக்களுக்கு நினைவூட்டுவதே நகைப்புக்கிடமான கேலிக்கூத்தாகும்.

இறுதி எச்சரிக்கை!

அறிவுத் துறைக்கு அமைச்சராக இருக்கும் தோழர் அவினாசியாருக்கு மட்டும் உண்மை புலப்படவில்லையோ, அல்லது, இந்நாட்டுக்கு ஒரு பொதுமொழி வேண்டுமென்று கூறப்படும் பித்தலாட்டத்தை அவரும் உண்மையென ஒப்புக்கொண்டு 'தாளம்' போடுகிறாரோ என்பது இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாததாகவே இருக்கிறது. ஏனென்றால், பொதுமொழியைப் பொறுத்தவரையில், அவர் போடும் 'தாளம்' அவ்வப்போது தவறிக்கொண்டே வருகிறது. "இந்தி விருப்ப பாடம்தான். இல்லை இல்லை! கட்டாய பாடம்தான். இந்தியும் ஆங்கிலம்போல் அயல்மொழிதான" என்ற தடுமாற்றங்களோடுதான் கல்வி அமைச்சர் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறார்.

எனவே, தமிழ்நாட்டுக்கு இந்தி என்னும் 'இராகமும்' வேண்டாம், கல்வியமைச்சர் அதற்காகத் தாளமும் போடவேண்டாம் என்று 17—7—48-ல் சென்னையில் நடைபெற்ற மாகாண இந்தி எதிர்ப்பு மாநாடு எச்சரிக்கை செய்திருக்கிறது.

தமிழகத்தில் சுதந்தர சோஷியலிசக் குடியரசு அமைக்கப் பாடுபடும் புரட்சிப் படையின் முன்னணிப் பத்திரிகையான

தமிழ்முரசு

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

ஆகஸ்ட் 1-ந் தேதி ஞாயிறு முதற்கொண்டு வாரப்பதிப்பாக வெளிவரப்போகிறது. ஒவ்வொரு தமிழரும் சந்தாதாரராகச் சேர வேண்டுகிறோம்.

தனிப்பிரதி விலை அணா 2

ஆறுமாதச் சந்தா ரூ. 3. ஆண்டுச் சந்தா ரூ. 6.

எல்லா ஊருக்கும் ஏஜண்டு தேவை.

விவரங்களுக்கு

நிர்வாகி "தமிழ் முரசு" பதிப்பகம்

திருவல்லிக்கேணி, சென்னை 5.

சென்றவாரத் தொடர்ச்சி

தேவமொழி மக்களுக்கு ஏன்?

—●—

சமஸ்கிருதத்தை எவ்வளவு முயன்று—பயின்றாலும், அது, இப்போதுள்ள நிலையைப் பார்க்கிலும் ஒரு அணுவளவுகூட உயர் நிலையை அடைய முடியாது! ஏட்டு மொழியாய்ப் பாட்டு வடிவில் இருக்கும் நிலைக்கு மாறின சமஸ்கிருதம் இனி எந்தக் காலத்திலும் நாட்டு மொழியாய்ப் பேச்சு வடிவில் வரமுடியாதே! அது, உலக வழக்கழிந்தொழிந்த மொழியாயிற்றே! அதனை மீண்டும் உயிர்ப்பிக்கலாம் என்ற உருவற்ற காரியத்தில் இவர்கள் ஏன் இறங்கவேண்டும்? சமஸ்கிருதத்தைத் தங்கள் தாய்மொழியெனப் பேசிப் பெருமிதம் கொள்ளும் இவர்கள், தங்கள் தாய்தந்தையர், மனைவி மக்கள், உற்றார் உறவினர் முதலியவர்களுடன் அம்மொழியிற் பேசி அளவளாவி மகிழும் வாய்ப்பை ஏன் பெறமுடியவில்லை என்பதைக்கூட ஒரு சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை. சமஸ்கிருதத்தைப் பற்றி ஏதாவது பேசவேண்டுமென்றால், இவர்களுக்குத் தமிழோ ஆங்கிலமோ அன்றி வேறு மொழிகளோதான் தேவைப்படுகின்றதேயன்றி, அம்மொழியிலேயே அம்மொழியைப் பற்றிப் பேசவோ-விளக்கம் கூறவோ முடியாதே! தமிழில் ஒரு பாட்டைப் பாடி அதற்கு விளக்கம் தமிழிலேயே கூறமுடிவதைப்போல், சமஸ்கிருதத்தில் ஒரு சுலோகத்தைக் கூறி அதற்கு விளக்கம் சமஸ்கிருதத்திலேயே கூறமுடியாதே! ஒருகால் முயன்றாலும், அதற்கு இன்னொரு சமஸ்கிருதச் சுலோகத்தைத்தான் தேடிப் பிடிக்க வேண்டுமேயன்றி, அதனை உரைநடை வாயிலாக விளக்கச் சமஸ்கிருதம் பயன்படாதே! இந்த இரங்கத்தக்க நிலையில் சமஸ்கிருதத்தை இந்நாட்டில் பரப்பும் பயனற்ற முயற்சியை ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இனிச், சமஸ்கிருதம் இந்நாட்டுக்குத் தேவையும்—பயனுமற்ற ஒரு மொழி என்பதற்கு நாம் கூறும் காரணங்களை ஒருவேளை நாம் அந்த மொழியின்மீது கொண்ட ஏதோ வெறுப்பின் காரணமாகக் கூறுகின்றோம் என்று சில குறைமதியினர் கருதக்கூடும். ஆகையால், சமஸ்கிருதம் இந்நாட்டுக்கு ஏற்புடைய ஒரு மொழியல்ல என்பதற்குரிய காரணங்களைக் காலஞ்சென்ற வடநாட்டுப் பேரறிஞரான இராஜா ராம் மோகன்ராய் அவர்கள் கூறியுள்ளார். அவருடைய சிறந்த கருத்துக்களை யாவது இன்று சமஸ்கிருதத்துக்கு உயிர்ப் பிச்சை அளிக்க முயல்வோர் உணர்ந்து பார்க்க வேண்டுகிறோம்.

1. சமஸ்கிருதத்திலுள்ள பழங்கால அறிவை இன்றைய மாணவர்களுக்குக் கற்பிப்பதால் யாதொரு பயனும் ஏற்பட்டு விடாது.

2. இன்றைய சமஸ்கிருதப் பள்ளிக்கூடம், ஐரோப்பாவில் பேக்கன் பிரபு என்பவர் காலத்துக்கு முந்திய பள்ளிக்கூடத்தோடு ஒப்பிடக் கூடியதாகவே இருக்கும்.

3. சமஸ்கிருதப் படிப்பானது உலக வாழ்க்கைக்குப் பயனற்ற இலக்கணங்களையும், தத்துவக்கூறுபாடுகளையும் இளைஞர்களுடைய மனதில் சுமத்தக் கூடியதாக இருக்கிறது.

4. சமஸ்கிருத மொழியில் ஒருவன் புலவனாக ஆகவேண்டுமானால், அவன் தன் வாழ்நாள் முழுவதும் படிக்கவேண்டிய அவ்வளவு கடின மொழியாக இருக்கிறது.

5. சமஸ்கிருதத்திலுள்ள இலக்கணப் பகுதிகளை மட்டும் ஒரு மாணவன் 12 ஆண்டுகளுக்கு மேல் படித்தால்தான் அதில் சிறிதளவாவது திறமையுள்ளவனாக ஆகமுடியும்.

6. சமஸ்கிருதப் படிப்பு, அறிவைப் பரப்புவதற்கு நீண்டகாலமாக ஒரு வருந்தத்தக்க தடையாய் இருக்கிறதென்பது நன்கு ஆராய்ந்தறியப்பட்ட உண்மையாகும்.

7. சமஸ்கிருத அறிவு திறக்கமுடியாத ஒரு மூடாக்குக்குள் அடங்கி இருக்கிறது.

8. சமஸ்கிருத அறிவைப் பெறுவதற்கு நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்குத் தக்க பயன் கிடையாது.

என்று, இன்றல்ல, நூற்றாண்டுகட்கு முன்னரே இராஜா ராம் மோகன் ராய் அவர்கள் கூறியுள்ளார். எனவே, இப்போது சமஸ்கிருதம் நாட்டில் பரவவேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்த அரிய கருத்துக்களை நன்றாக உணர்ந்து பார்க்க வேண்டுகிறோம்.

சமஸ்கிருதத்தில் ஒரு மாணவன் புலவனாக வரவேண்டுமானால், அவன் தன் வாழ்நாள் முழுவதும் அதனையே படித்துக்கொண்டிருக்க வேண்டிய ஒரு கடினமான மொழியென்றும் மோகன்ராய் கூறுகின்றார். ஒருமாணவன், தன் சமஸ்கிருதத்தில் புலவனாக வர விரும்பினால், அவன் தன்னுடைய வாழ்நாள் முழுவதையுமே சமஸ்கிருதம் கற்பதில் செலவு செய்வானானால், அவனுடைய வாழ்க்கை என்ன ஆகும் என்பதையும், சமஸ்கிருதப் படிப்புக்கே அவனுடைய மற்றைய அறிவு விளக்கத்திற்கான படிப்புகளையும், அவ்வறிவால் தனக்கும் பிறர்க்கும் பயன்படும் வாழ்க்கையையும் எப்படி-எப்போது நடத்த முடியும் என்பதையும் எண்ணிப் பார்ப்பதோடு, சமஸ்கிருதத்தைப் பெயரளவுக்காவது படிக்கவேண்டுமென்பதற்காக ஒரு மாணவன் தன்வாழ்நாளில் ஒரு பகுதியை ஒதுக்கி அதனைப் படித்தாலும், அதனால் அவன் உலக வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய நன்மையான அறிவு எதனையும் பெறமுடியாதென்பதையும் சமஸ்கிருதத்துக்காகப் பரிந்து பேசுபவர்கள், இளமாணவர்களின் முன்னேற்றத்தை மனதில் கொண்டாவது இவ்வேண்டா முயற்சியைக் கைவிடக்கூடாதா?

இனி, ஒருமாணவன் சமஸ்கிருத மொழிக்கென அமைந்திருக்கும் இலக்கண வரம்புகளைக் கண்டறிவதற்கே அவன் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேல் அம்மொழியைப் படிக்கவேண்டுமென்று கூறப்படு

(௨-ம் பக்கம் பார்க்க)

திராவிடஸ்தான்!

[சாத்தூர் சா. இராமசாமி]

சென்றவாரத் தொடர்ச்சி

பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்னர், சரித்திரம் செம்மையுறுக் காலத்திற்கு முன்பே தமிழ், 'பண்கள்' மூலமே பனையோலைகளில் சுவடியாயிற்றென்பதிலிருந்து, அது படிப்படியாக வளர்ந்து செவிக்கின்பமூட்டும் இசையாக மாறிற்று. இதனாற்றான் நம் முன்னோர்கள் இசைத்தமிழ் என்று சிறப்பிக்கலாயினர்.

சங்க நூல்களிலும், இதர பழைய நூல்களிலும், அரண்மனை, மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், நாடக மேடைகள், நந்தவனங்கள், பந்தாடும் மைதானங்கள் போன்ற பல சிற்ப அமைப்புகளைப் பற்றி சிறப்புடன் வர்ணித்துள்ளார்கள். நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்றது இலக்கியமட்டுமன்று இயம்பொணா விசித்திர விநோத சிற்பச் செல்வங்களுமாகும். அழகான ஆலய அமைப்புக்களையும், சிலைகள், சித்திரங்கள் முதலிய கண்ணுக்கினிய காட்சிகளும் ஆகும்.

வடநாட்டு தாஜ்மகாலை நிர்மாணிக்க பிறநாட்டு சிற்பக் கலைஞரின் உதவி தேவையிருந்தது.

ஆனால், நம் நாட்டுத் தஞ்சாவூர் கோபுரம், திருச்சி மலைக்கோட்டை, திண்டுக்கல் மலைக்குகை, மதுரை திருமல்நாயக்கர்மகால் முதலிய அதியற்புதக் கற்பிதங்களை நிர்மாணிக்க எந்த அந்நிய நாட்டுக் கலைஞனும் வரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கணிதமும், விஞ்ஞானமும் நம் நாட்டிலே பிறந்துவளர்ந்து அரபிய நாட்டு மூலம் மேனாட்டிற்கு வாழச் சென்றன என்பது விஞ்ஞான வாதிகள் ஒத்துக்கொண்ட உண்மையாயாகும்.

இரும்பைப் பொன்னாக்க, பயில முயன்ற நம் நாட்டு ரசவாதிகளின் செயல்களே மேனாட்டார்க்கு கெமிஸ்ட்ரி (ரசாயனம்) முறை தோற்றமாயிற்று.

மூலிகைகளிலிருந்து மருத்துவ சிகிச்சை பிறந்தது எவருமறிந்ததாகும். மூலிகைகளின் முதல் தோற்றமும், வைத்திய வழியும் தமிழ் நாட்டிலேதான் ஆரம்பமாயிற்று என்பதற்கு ருசுவாக எத்தனையோ பழைய சுவடிகள் இன்றும் நம் நாட்டுப்புறங்களில் உலாவுகின்றன. அந்தப் பழையகால தமிழர் சித்தவைத்யத்திலிருந்துதான் ஆங்கில நவீன வைத்ய முறைகளெல்லாம் பிறந்தன.

இத்தகைய வாழ்க்கைத் தெளிவு, நாகரிக வளர்ச்சி, அறிவின்முதிர்ச்சி முதலிய சிறப்புகட்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்ற பண்டைய தமிழகத்தின் அரசியல் அமைப்பு இன்னும் அநேக மடங்கு அதிகமான பெருமைக்கும், புகழுக்கும் உரியதாக இருந்தது. அந்தக் காலத்து திராவிடநாட்டு அரசாங்கம் மக்கள் வாழ்வின் உயர்வுக்கு உறுதுணை புரிந்ததுடன் வருங்கால உலக ஆக்கத்திற்கு வழிகாட்டியாகவுமிருந்தது என்று சொல்லலாம்.

ஒரு இராச்சியம் பல மண்டலங்கள், கோட்டங்களாகவும், கோட்டங்கள் கூறுகளாகவும் வரிசையாக வகுக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது. இராச்சியத்தில் அரசனே முதன்மையான பதவியாளன். அவ்வரசனுக்கு ஆலோசனைச் சங்கம் அந்தணர் (பொதுநலத்தொண்டு புரியும் பெரியார்கள்) அமைச்சர், சேனாதிபதியார், தூதர், ஒற்றர் ஆகிய ஐம்பெரும் குழுவினராலாயது. அரசன் கட்டளைகளை எழுதும் அதிகாரிக்கு திருமந்திரஓலை நாயகன் (Royal Secretary) என்று பெயர். அக்கட்டளை அனுப்பிவைக்கும் 'காரியவாதி'க்கு விடையில் அதிகாரி என்று பெயர். வாங்கிய வரிகளை கணக்கெழுதுவோருக்கு 'வரியிலார்' என்று பெயர். பத்திரங்கள் காப்பிடம் பெறுவதற்கு 'ஆவணக்களரி' (Registration officer)யும் உண்டு. இரவு பகலாய் நகரைக் காவல் புரியும் காவலரும் (Police) உண்டு. அக்காலத் தமிழராட்சியில் தங்க நாணயங்களுமிருந்தன. அத்தங்க நாணயத்தை கிளியின் மூக்கிலுள்ள ஒரு வேப்பம் பழத்திற்கு 'குறுந்தொகை'யில் உவமிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில், சர், திவான் பகதூர், ராவ்சாகிப் என்று வழங்கப்படும் கௌரவப் பட்டங்களைப் போல அக்காலத்தில் ஏனாதி, எட்டி, காவிதி, என்பன போன்ற பட்டங்களை அரசாங்கத்தார் தகுதியுள்ளோர்களுக்கு வழங்கி வந்திருக்கிறது. இன்னும், அரசாங்கக் காரியத்திற்கு பொறுக்கி எடுக்கப்படும்நபர்களுக்கு 'குடவோலை' முறையும் அதாவது தேர்தல் உண்டு. மேலும்கிராமஅதிகாரிவெட்டியான் தலையாரி என்பதெல்லாம் பண்டைய காலந்தொட்டு வழங்கி வந்த பெயர்கள்தாம்.

இந்தப் பரந்த உலகிலே உண்மையான ஜனநாயக தத்துவம் பிறந்தது பழம்பெரும் நம் தமிழ்த் தாயகத்தில் தான். ஒவ்வொரு அந்நிய நாட்டாரும் அநுபவ வாழ்க்கைச்சிந்தாந்தங்களை நம்மிடமிருந்தே பெற்றுப் போயிருக்கின்றனர். கடவுள் கொள்கையிலும் சரி, அரசியல் அமைப்பு, மக்கள் வாழ்க்கையின் விழுப்பம் நிறைந்த ஒழுக்க நாகரிகத்திலும் சரி தமிழ்நாட்டின் பெருமைகள் ஒவ்வொரு உலக அறிஞனாலும் பேசப்பட்டது.

மனிதசமூகத்தின் பெருந்தன்மை, நியாயம், தூய்மை, சாந்தம் முதலிய குணங்களில் பூரணமடைந்ததும், அகநோக்கிலும், புற நோக்கிலும் இயற்கை முறையோடு ஒத்துப் போனதுமான ஒருநாடு உண்டானால் அது நமது திராவிடநாடேயாகும்.

வீரத்திற்கு உறைவிடமாயும், அன்பு நட்புக்கு ஆதரவு தருமிடமாயும், நியாயம் வழங்குவதில் நேர்மை மிகுந்ததாயும் இருந்த பெருமை நம் தாய் நாடான தமிழ் நாட்டுக்குத் தான் உண்டு.

அறத்தின் அடிப்படை எனத் தரும் திருக்குறள் படைத்த வள்ளுவர் பிறந்த தமிழ்நாடு. மனித உணர்ச்சிகளைச் சித்தரித்துக் காட்டும் சிலப்பதிகாரம் பிறந்த தமிழ் நாடு.

(13-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

கற்பனைச் சித்திரம்

[18-7-48 தொடர்ச்சி]

பூஜை செய்யச் சென்ற இடத்
லே, காதற் பேச்சு — கள்ளக்
ாதல் சேட்டை நடைபெறுவது
தரிநதும், நான் கொஞ்சம் திடுக்
ட்டுப் போனேன். சேட், ஏழைக்
டும்பத்திலே சம்பந்தம் செய்து
காண்டவர், பெண் அழகி, என்பது
னக்குத் தெரியும், என்றாலும்,
மது நாட்டிலே இதுபோல ஆயிரக்
ணக்கான பொருந்தாக்கலியாணங்
ள் நடைபெற்று இருப்பதால், இந்
க் கலியாணமும், ஏதும விபரீத
ான விளைவுகளின்றிச் சகஜமான
ாகிவிடும் என்று எண்ணிக்கொண்
டன். ஆகவே, எனக்கு, தூக்கி
ாரிப் போட்டது, கள்ளக் காதல்
பச்சு. பாவம்! சேட், எவ்வளவு
தைப்பார், இது தெரிந்தால்.
ாார் எவ்வளவு இழித்தும் பழித்
ம் பேசுவார்கள் இது தெரிந்தால்,
ன்று எண்ணினேன்—உண்மையி
லயே எனக்குச் சேட்டின் நிலைமை
யைக் கண்டு, அவனிடம பரிதாபம்
றந்தது. ஊரிலே, புகழ், செல்
ாக்கு, வியாபாரததிலேயோ
வற்றி அமோகம்—லட்சுமி கடாட்
ம் பரிபூரணமாக இருக்கிறது—
ருந்து என்ன பலன்! அவனுடைய
டும்ப வாழ்க்கை இப்படிக் கேவல
ானதாக இருக்கிறது. இருமபுப்
பட்டியைத் திறநது பார்த்ததும்,
திலே உள்ள ஆபரணக் குவியல்
வனுக்கு ஆனந்தத்தைத் தரும்,
ஆனால சூரியன் மறைந்ததும்,
தருக் கோடியிலும் புறக்கடைகளி
லும், வம்பளப்பவர்களின் வாய்
றந்துவிடுமே; அவர்கள் பேசுவது
சட்டின் காதிலே விழுந்தால்,
ாவம் அவன் மனம் என்ன பாடு
டும். இலட்சாதிகாரியாக இருந்து
ன்ன பிரயோஜனம். அவமானத்

தைத் தாங்கிக்கொள்ள முடியுமா! இப்படி எல்லாம் நான் எண்ணினேன். இந்தக் காதகன் யார்? சேட்டின் குடும்பத்தைக்குலைக்கும் கொடியவன் யாராக இருப்பான்? இளம் பெண்ணின் மனதைக் கெடுத்து, மாதர்களுக்கு மகிமை தரும் கற்பு எனும் பூஷணத்தைச் சூறையாடும் இந்தக் காமாந்தகாரம் பிடித்தவன் யார்?—என்று கண்டறிய ஆவல் கொண்டேன். யாருக்கும ஏற்படக்கூடிய ஆவல்தானே இது—எனக்கும் முதலில் யாருக்கும் ஏற்படுவது போன்ற ஆவல்தான உண்டாயிற்று. ஆனால், சில விநாடிகளிலே, இந்த ஆவல், என் மனதிலே வேறுவித மான, யோசனையாக மாறலாயிற்று. சேட்டின் மனைவி நடத்தும் இந்தக் காமச் சேட்டையை நான் கண்டு பிடித்து, அந்த இரகசியத்தை என் உள்ளங்கையில் வைத்துக்கொண்டு, அவளை மிரட்டினால், அவளிடமிருநது, ஏராளமான பணம் பெறலாம்; இநத இரகசியத்தைத் தங்கச் சுரங்கமாக்கலாம், என்ற எண்ணம ஏற்பட்டது. அவளுடைய இரகசியத்தின் முழு விவரத்தையும், அறிநதுகொளள வேண்டும், பிறகு, அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். அவசரம், ஆத்திரம கூடாதல்லவா! நான், என் மனதிலே மூண்டத ஆவலைக்கூட அடக்கிக்கொண்டு, அனாதரட்சகா! ஆதிபராநதாமா! லட்சுமீமணாளா! என்று உரத்த குரலில் அர்ச்சித்துக் கொண்டிருந்தேன். இநத வார்த்தைகள் உதட்டிலே உலவின, உள்ளத்திலேயோ, அந்த இரகசியத்தை எப்படிக் கண்டறிவது, என்பது பற்றிய சிந்தனையே நிரம்பிக் கிடந்தது. கொஞ்ச நேரம் சென்றதும், அவளே, பூஜை அறைப்பக்கம் வநதாள்—முகம், அலாதியான அழகுடன்விளங்கிற்று. ஒரு கணம் அவளைப் பார்த்ததும், எனக்கு அவள் நிலைமை புரிந்து விட்டது. என் பார்வையின் பொருளை அவள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. வழக்கத்துக்கு மாறாக அவள் மகிழ்ச்சியுடன் இருந்தாள். "ஸ்வாமீ! என்ன இன்று பூஜை நெடுநேரமாக நடக்கிறது!" என்றுகூட என்னைக் கேட்டாள். எவ்வளவு தைரியம் இவளுக்கு—பாபக்கிருத்யத்தைப் புரிந்துவிட்டு, பசப்புமொழி பேசுகிறாள். பஞ்சாங்கக்காரனுக்கு, நமது இரகசியம் எப்படித் தெரியப் போகிறது என்ற தைரியம்! இருக்கட்டும், இருக்கட்டும், என்று மனதிற் கூறிக்கொண்டு, அவளுடைய கேள்விக்கு, தக்க பதிலளிக்க வேண்டுமென்று தீர்மானித்து, "பூஜைக்குக்கூட ஒரு அளவு உண்டா! எவ்வளவு செய்ய வேண்டும் என்று ஒரு கணக்கா இருக்கிறது. பாபங்கள், சதா சர்வ காலம், மனிதர்களைச் சூழ்ந்து கொண்டு நடமாடிக்கொண்டுள்ள காலமாயிற்றே இது. எந்த நேரத்திலும், நாம், அறிந்தோ அறியாமலோ, பாபகாரியம செய்துவிடக் கூடும்—பாபம் நம்மைத் தீண்டி விடக்கூடும். ஆகவே, எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் பகவன்நாம ஸ்மரணை செய்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது" என்று நான் கூறினேன். என் பேச்சு, அவளுடைய சிந்தனையைக் கிளறிவிட்டிருக்கும், அவ்வளவு உருக்கமாகப் பேசினேன—"பாபம, என்ன ரூபத்திலே இருக்கும்?" என்று அவள் கேட்டாள். போசகிரிததனமான கேள்வியல்லவா, அது. நான், அவளுக்கு "பெண்ணே! உன் கள்ளககாதலை, காமச் சேஷ்டையை நான் அறிவேன்." என்று கூறிவிட வேண்டும் என்று முதலில நினைததேன்—பிறகு, அநத ஆசையை அடக்கிக்கொண்டு, மறைமுகமாகப் பேசியே அவள் மனதைத் தாக்கவேண்டும என்று தீர்மானித்து, "பாபம, என்ன ரூபத்தில் இருக்கும் என்று அம்மா, கேட்கிறாய். பலபேர், பாபம், கோரமான ரூபத்திலிருக்கும், கரிய உருவமும், செம்பட்டை மயிரும், நெருப்பைக் கக்கும் கண்களும கொணடதாக இருக்கும்; பற்களை நற நறவெனக் கடிக்கும்-துர்கந்தம்வீசும்-அகோரக் கூச்சலிடும்-என்றெல்லாம் சொல்லு

வார்கள். அது தவறு. பாபம், சௌந்தர்யமான வாலிபனாக, சிரித்துப் பேசும் சொகுசுக்காரனாக, மனதை மயக்கவைக்கும் சொக்குப்பொடி வீசுபவனாக ரூபமெடுத்து வரும்" என்றேன். கூறிவிட்டு, அவள் முகம் என்ன நிலையாகிறது பார்ப்போம், என்று கவனித்தேன். வாலிபன்! வசீகரச் சிரிப்பு! சரசப்பேச்சு!-இவ்விதம் நான்தான் ஜாடையாகப் பேசினேனே, அவள் சேஷ்டையை நான் அறிந்துகொண்டேன் என்பதை விளக்க — அவள் பயப்படாமலிருக்க முடியுமா!—என்று நான் எண்ணிக்கொண்டேன். அவளுடைய முகமோ ஒருவிதமான மாறுதலையும் அடையவில்லை. இந்த ஏமாற்றம் எனக்கு வாட்டத்தைத் தந்தது. அவளுடைய பேச்சோ, என் வாட்டத்தை அதிகப்படுத்திற்று. "உண்மைதான்! பாபம், பயங்கரமான உருவம்கொண்டதாக இருக்குமென்று கூறுவது தவறுதான். பாபம், சுந்தர புருஷனாகக் கூடத்தான் உருவெடுக்கிறது. பார்த்தவர்களெல்லாம், என் நவரத்ன கண்டியைப் புகழ்ந்தார்கள். அதிலே உள்ள பச்சைக் கற்களையும் நீலமணிகளையும் கண்டு பரவசமடைந்தார்கள்—ஒருவரும் அந்த நவரத்ன கண்டி, பாபத்தின் சொரூபங்களிலே ஒன்று என்று தெரிந்து கொள்ளவில்லை. அந்த நவரத்ன கண்டியின், மணிகள், வஞ்சகம், மோசடி, பொய், புரட்டு, தப்புக்கணக்கு, ஆகியவைகள்—பச்சை—நீலம்—வைரம்—கோமேதகம் என்று பல வசீகரமான ரூபத்திலே பாபங்கள் இருந்தன! பாபம், அவ்வளவு அழகான ரூபத்தில் இருந்திடக்கூடும் என்பதை ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லை"—என்று அவள், வேதாந்தம் பேசினாள். பயப்படுவாள், திடுக்கிடுவாள், என்று நான் எண்ணி ஜாடையாக, பாபம் ஒருசௌந்தர்யமான வாலிபப் புருஷனாக உருவெடுத்துவிடும் என்று கூறினால், அவள், எனக்கே, உபதேசம் செய்யும் விதமாக, வேதாந்தம் பேசுகிறாள்-இந்தவிந்தை என்று நான் யோசித்தேன்.

"பாபத்தைப் பற்றி, சாங்கோபாங்கமாகப் பேசும் அளவுக்குத் தங்களுக்குப் பாண்டித்யமிருக்கும் என்று நான் எண்ணவேயில்லை" என்று நான் கூற, அவள், "என் அண்ணன் ஒரு பெரிய வேதாந்தியாக இருந்தவன்-பல வருஷகாலம் பண்டிதர்களோடு வாசம் செய்தவன்—அவனுடைய சிஷ்யையாக இருந்திருக்கிறேன் ஒரு ஆறுமாதகாலம்"—என்றாள். ஓஹோ! — என்று, கொஞ்சம் குறும்பாகச் சொன்னேன். "ஸ்வாமீ! ஆச்சரியப்படுவீர், என் அண்ணனைப்பற்றிய முழுவிவரம் தெரிந்தால். அவர், மகாபண்டிதர்களோடு வாசம் செய்தார் பல வருஷம் என்றேனே—ஏன்—எப்படி—என்பது தெரிந்தால், பயந்துபோவீர். ஒரு கொலை செய்துவிட்டார் என் அண்ணன்—போலீசின் பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டு, தலைமறைவாக இருந்தார் பல வருஷம்—கொலையை இவர்தான் செய்தார், என்பதற்கான சாட்சிகள் ஒவ்வொன்றாக, மறையும் வரையில், என் அண்ணன் மகாபண்டிதர்களுடன் இருந்து வந்தார். இனி வெளியே உலவினாலும் வம்பு நேரிடாது என்பது தெரிந்தபிறகு, வீடு வந்தார், ஆறுமாதகாலம் தங்கியிருந்தார்—திடீரென்று மாரடைப்பு அவரைக் கொன்று விட்டது—அவருடைய, உபதேசங்கள் நான் ஆறுமாதம் கேட்டு, பல அரிய உண்மைகளைத்தெரிந்து கொண்டேன்" என்றாள், "ஏதேது! இவள்கள்ளி—காமச்சேட்டைக்காரி—என்று எண்ணினேனே. இவள், ஒரு கொலைகாரனின் தங்கையுமாகவன்றோ இருக்கிறாள். இவள், தன் இரகசியம் வெளியானால்கூட அஞ்சமாட்டாள்போலிருக்கிறதே என்று நினைத்தேன்—சற்று வருத்தமுமடைந்தேன். வேறோர் திக்கில், பேச்சைத் திருப்பிவிடலானேன். "பூஜை வெகு அதிக நேரம் செய்யவேண்டும் தெரியுமோ! பக்தியோடு, பகவானை ஒரு விநாடி துதித்தாலும் போதும் — ஆனால் காமக்குரோத மதமாச்சரியாதிகள் சூழ்ந்துள்ள இந்த லோகத்திலே, வேறு எந்தச் சிந்தனையும் கொள்ளாமல், பகவானை உள்ளத்தில் ஒரு விநாடி நிலைநிறுத்துவதும், மகா கடினமான காரியம். அந்த ஒரு விநாடி கிடைக்க, மணிக்கணக்கில்லல்ல, வருஷக்கணக்கிலே கூடப் பூஜை செய்யவேண்டும். உதாரணமாக, இன்று, நடைபெற்றதைக் கேளுங்கள். சுத்தமான மனதுடன் தான், நான் பூஜையைத் துவக்கினேன். கண்களை மூடிக்கொண்டு, கண்ணா, மணிவண்ணா! — என்று ஸ்மரிக்கலானேன்; எங்கிருந்தோ, ஒரு சத்தம் கிளம்பி என் சித்தத்தைக் குலைத்துவிட்டது" என்றேன் "என்ன சத்தம்? முரளிகானமோ...?" என்று அவள் கேட்டாள். குறும்பாகவோ, சகஜமாகவோ என்பது புரியவில்லை. "முரளியல்ல! காமாந்தகாரகானம்! எவளோ ஒரு தூர்த்தை! தன் கள்ளக்காதலனுடன், கொஞ்சி விளையாடுவது போன்ற சத்தம் கேட்டது" என்று நான் கூறினேன். வீசிவிட்டோம் வெடிகுண்டை, இனி அவள் வெலவெலத்துப் போவாள், வீழ்வாள் என் காலடியில், வேண்டிக்கொள்வாள் தன்னைக் காப்பாற்றச் சொல்லி, என்று நான் கருதினேன். அவளோ, நான் சொன்னது கேட்டு ஆச்சரியமுற்றதாகவோ அஞ்சியதாகவோ காட்டிக் கொள்ளவில்லை. "உங்கள் காதிலே சத்தம் கேட்டதா!" என்று தனக்குள் கூறிக்கொள்வது போலப்பேசினாள். அவள் பயப்படுவாள் என்று நான், எண்ணினேன், அவளுடைய நடத்தையோ, எனக்குப் பயமூட்டிற்று. இரண்டோர் நிமிஷம், அவள் மௌனமாக இருந்தாள். அந்த இரண்டோர் நிமிஷங்கள், எனக்கு யுகம்போலத் தோன்றிற்று. நான்தான் மௌனத்தைக் கலைத்தேன். "ஏன்! அந்தச் சத்தம் தங்கள் காதிலேயும் விழுந்ததோ?" என்று கேட்டேன். தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவள்போல அவள் பேசினாள், "சத்தம் கேட்டதா! பைத்யமே நீர்! சத்தம், கிளம்பியதே என்னிடமிருந்துதானே! நான்தான் சரசமாடிக் கொண்டிருந்தேன்!!" என்றாள். என்மீது, வெடிதண்டு மட்டுமல்ல, வெடிகுண்டு, விஷப்புகை, இன்னும் என்னவெல்லாமோ வீசியது போலாயிற்று. என்னையுமறியாமல் என் உடல் நடுங்கிற்று. அவள் புன்னகை புரிந்து, "என் பேச்சு, உம்மைத் திடுக்கிடச் செய்திருக்கும். எதிர்பாராத தாக்குதல் போலிருந்திருக்கும். பயப்படாதீர். நான்தான், தங்கள் சித்தத்தைக் குலைத்த, அந்த சரசச் சத்தத்தை உண்டாக்கியவள். என் காதலனுடன், நான் சரசமாடிக் கொண்டிருந்தேன்" என்று கூறினாள். எனக்கு, என்ன பேசுவது என்ன செய்வது என்றே புரியவில்லை—திகைத்தேன் —முகத்திலே துளியும் கவலையோ, கலக்கமோ காணப்படவில்லை, அவளுக்கு ஒரு பெரியதவசி, மிகக்கஷ்டமான மந்திரத்தைக் கூறிவிட்டு; அதன் பொருள் விளங்காமல், தவித்துக்கொண்டிருக்கும் சீடனைப் பார்ப்பது போல;

அவள் என்னைப் பார்த்து, "புரியாது உமக்கு. பூஜைவேளையிலே, இந்தப் புதுக்காடி புகுந்ததே என்று பயப்படுகிறீர். உமக்குப் புரியக்கூடிய விதத்திலே, நான் விஷயத்தை விளக்குகிறேன், பிறகு, இடோ ராது. நான் கேட்கும் ஒரு கேள்விக்கு பதில் கூறும், பாபக்கிருத்யம் என்கிறீரே, அந்தப்பாபக் கிருத்யத்திலே, மகாபயங்கரமானது, பர்த்தாவுக்குத் துரோகம் — செய்வது — அல்லவா? அதுபோன்ற, பாபக்கிருத்யமாகட்டும், சாதாரணப்பாபமாகட்டும் ஏன் சிலர் செய்ய நேரிடுகிறது" — என்றாள். நான் திணறினேன். வழக்கமான பதில் உண்டு இந்தக் கேள்விக்கு, பாபத்துக்குக் காரணம், பூர்வவினை — சகவாச தோஷம் — இந்திரியங்களை அடக்கத் தெரியாத [illegible] இத்யாதி. ஆனால் இந்த விசித்திர [illegible]. வழக்கமான இந்தப் பதில்களை ஏற்றுக் கொள்ளுவாளா, என்பதிலே எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஆகவேதான், அவளுடைய கேள்விக்கு நான் பதில் சொல்லமுடியாது திணறினேன். அவள் என்னிடம் கேள்வி கேட்டாளே தவிரப் பதிலை எதிர்பார்க்கவில்லை, என்பதை விளக்குவது போல, அவளாகவே மேற்கொண்டு பேசலானாள். "பாபம்செய்யவேண்டுமென்று யாரும் துடித்துக்கொண்டு, ஆவல்கொண்டு இருப்பதில்லை. சத்காரியம் செய்யவேண்டும், புண்யம் தேடவேண்டும், புனிதமாக வாழவேண்டும் என்றுதான், எல்லோரும் எண்ணுகிறார்கள். பாபத்தை விலக்கவே ஆசைப்படுகிறார்கள் — ஆனால் முடிவதில்லை. பாபத்தைப் புரியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது, பலருக்கு — தப்பித்துக் கொள்ளமுடிவதில்லை. சருக்கு நிலத்திலே, வழுக்கிவிழுவதுபோல, பாபச் செயலில்வீழ்ந்துவிடுகிறார்கள். நான் சாமான்யமானவள் — சகல கலைகளிலும் தேர்ந்தவளல்ல. என் கணவன், வியாபாரி, தவசியல்ல, இதுமாளிகை, ஆசிரமமல்ல! என் தவறு, பாபம், கிடக்கட்டும், ஆசிரமத்திலே, தவசியின் பத்னியாக இருந்த அகலிகை பாபம் செய்தாளே, அவளாகவா பாபத்தை நாடினாள் — தேடினாள். நீர் சொன்னீரே, கொஞ்சநேரத்துக்கு முன்பு, அதுபோல பாபம், சௌந்தர்யமான ரூபத்திலே வந்து நின்றது அவள் எதிரில். அவள் பாபத்தை அதற்கு முன்பு சந்தித்ததில்லை — சந்திக்கவேண்டுமென்று எண்ணினதில்லை. பாபம், பயங்கரமான உருவில் வந்திருந்தாலாவது, அவள் அதனை எதிர்த்திருப்பாள். இந்திரன் இணையில்லா அழகுடன் விளங்கினான் — அவள் இணங்கினாள். அவளுடைய பாபகிருத்யத்துக்காக, அவளுடைய 'பதி' — அவளைச்சபித்தார். சபித்தாரே தவிர, அவர் சிந்தித்தாரா, அகலிகை, பாபச் செயலைத் தேடிச்செல்பவளல்லவே — ஏன் அவள் பாபம்புரிய நேரிட்டது என்று யோசித்தாரா? இல்லை!

அவளோ, அழகி, இளமையும் எழிலும் ததும்பும் தங்கச்சிலை! கண்களோ, கனிரசக்கலசங்கள், நடை, மயிலைப்பழிக்கும் — குரல், குயிலைப்பழிக்கும் விதத்தது! களங்கமற்ற நிலவு அவள் முகம். இளம வல்லி — இருதய கனி — ஆ [illegible] — அகலிகையின் [illegible] இந்த ஆஸ்ரமத்தை அரண்மனையாக்கிவிடுகிறது. இந்த அடவியை அலங்காரபுரியாக்குகிறது........எல்லாம்சரி........ஆனால், என்னை........? இந்த ஜடைமுடியை! ஹோமப்புகை பட்டுப்பட்டு, சிவந்துபோயுள்ள, இக்கண்களை — நேம நிஷ்டை செய்து செய்து, தவக்கோலம் தங்கிவிட்ட இந்தத்தேகத்தை — என்வயோதிகத்தை, அந்த அழகி, விரும்புவாளா — மாற்றவல்லவளா — அவள் மனதிலே எழும் ஆனந்த அலைகளை அடக்கும் ஆற்றல், என் வேத ஒலிக்கு ஏற்படுமா? மூச்சையுமடக்கி மோனநிலையை அடைந்து மூலத்தைக் கண்டறியும் பணியிலே மும்முரமாக ஈடுபட்டிருக்கும் என்னுடன், இந்த ஓலைக்குடிசையிலே தங்கி, அந்தச் சோலைக்கிளி மொழியாள், என்ன சுகம் காண்பாள்! அவள் பொன் அவிர்மேனியாள் — நான்புலன்களை அடக்கும், தவசி. நானோ அவளுக்கு ஏற்ற நாயகன்!

காண்டலத்திலே இருந்த நீரைவிட அதிகமாகக் கண்களிலே கொண்டு, கௌதமன், கசிந்துருகி, இவ்வாறு யோசித்தானா — அழகி அகலியைத் தன்தாரமாகக்கொண்டபோது! இல்லை! தவம் நமக்கு மகத்தான பலன் தருகிறது, தேவனின் திருஅருளை பெற்றுத்தருகிறது — அம்மட்டோ — இதோ இந்தத் தேன்மொழியாளையும் நமக்குத் தேவியாகத்தருகிறது, என்று எண்ணித்தன் பூரித்திருக்கமுடியும் — சிந்தித்திருக்கமாட்டார், நாமோ காட்டிலுலவும் தவசி, அவளோ காதல்வானில்பறந்திடும் வானம்பாடி, வயோதிகப்பருவத்தினராகிய நமக்கு அந்த வசிகரவனிதை ஏற்றவளல்ல — என்றெல்லாம் சிந்திததிருக்கவேமாட்டார். சிந்தித்திருந்தால், அந்தத்திருமணம் நடந்தே இராது! திருமணமா அது? திருவும் மணமுமற்ற, கூட்டுறவு. அந்த நேரத்திலே, கௌதமர், தமக்கும் அகலிகைக்கும், தமதுவாழ்க்கை முறைக்கும் அகலிகையின் மனப்பாங்குக்கும், பொருந்தாது என்பதுபற்றி எண்ணவே இல்லை. அகலிகையைக் கல்லாக்கிவிட்டு, இரண்டோர் சொட்டுக்கண்ணீர் அந்தக் கல்லுருவின்மீது சிந்தியபிறகுதான், அவள் அழகி, நாம் தவசி! அவள் கருங்குழலி, நாம் ஜடாமுடிக்காரர், அவள் காதற்குயில், நாம் ஓமக்குண்டக்காவலர், நமக்கும் அவளுக்கும் எப்படி பொருந்தும் — அவளை நாம் மணம் செய்துகொண்டது பெரும்பிழை — என்று சிந்தித்திருப்பார் — பெருமூச்செறிந்திருப்பார்.

விபசாரம் செய்துவிட்டு, வேதாந்தமும் புராணமும் பேசி, அகலிகையையும் கௌதமனையும் சாட்சியாக்கி, சாகசமா செய்கிறாய் — என்று என்னைக் கேட்கலாமா என்று தோன்றும் உங்களுக்கு. நான் அகலிகையல்ல — என் கணவனும் தவசியல்ல — அதுபோலவே, என் காதலனும், இந்திரனல்ல — வாரும், அவரைக் காட்டுகிறேன் — என் அறையிலேதான் இருக்கிறார் — பயப்படாமல் வாரும்" — என்று கூறினாள். "சரி, சரி, இவள் சித்தப்பிரமை கொண்டவள்" என்று எண்ணினேன். அவளிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாத நிலையில் தவித்தேன். அவளோ, வற்புறுத்தி, என்னைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றாள். கதவு மூடப்பட்டிருந்தது. மெல்ல அதைத் திறந்தபடி, அவள், "இதோ பாரும், என் இந்திரனை!" என்றாள்.

(தொடரும்)

சென்னை நண்பர்கள் கழகத்தார்

"கலிங்கத்தின் மர்மம்"

என்ற நாடகத்தை 25—7—48 மாலை ஆறு மணிக்கு சென்னை V. P. மண்டபத்தில் தேமூர் அண்ணாத்துரை தலைமையில் நடிப்பார்கள்.

திராவிட நாடு

காஞ்சி] 25—7—48 [ஞாயிறு

அறப்போர்

✻

ஆகவே, எமக்கே 'ஓட்' அளியுங்கள்! அன்பர்களே! மந்திரிசபையை மாற்றி அமையுங்கள்!

நண்பர்களே! நாடாள எம்மை அனுமதியுங்கள்! தோழரே! தேர்தல் வருகிறது, எம்மை மறவாதீர்!

* * *

அன்று, 17ந்-தேதி நடைபெற்ற இந்தி எதிர்ப்பாளர், மாநாட்டிலே, இவையல்ல, பேச்சாளர்களின் பல்லவி!

ஆகவே அருமைத் தோழர்களே! நமது மொழியை, பிறப்புரிமையைக் காப்பாற்ற எல்லா வகையான தியாகத்துக்கும் தயாராக இருங்கள்!

அறப்போர் தொடுத்துவிட்டோம் — ஆட்சியாளர் அவிழ்த்து விடும் அடக்குமுறையைத் தாங்க சித்தமாக இருங்கள்.

சிறையில் அடைத்தால், செந்தமிழ் காக்க என் கடமையைச் செய்துவிட்டேன், என்று சித்தம் களியுங்கள்.

அடித்தால், பட்டுக்கொள்ளுங்கள்! தாக்கினால் தாங்கிக் கொள்ளுங்கள்! இரத்தம் ஒழுகும்படி அடித்தால், இலட்சியத்துக்குத்தரும் விலை, இது, என்று எண்ணிக்கொள்ளுங்கள்!

தலைவர் பிறப்பித்த தாக்கீது இது போல,

பயப்படாதீர், நமக்குப் பலம் அமோகம். பண பலம், அமோகம். பத்திரிகை பலம் அமோகம். பார் முழுவதும் நமது பராக்குக்காரர் பவனி வந்தபடி உள்ளனர்.

என்று, அசட்டு ஆவேசத்தைத் தாராளமாக அள்ளி வீசும் பேச்சா? அல்ல! அல்ல!

அவர்கள் ஆற்றல் மிக்கவர்கள்—ஆதரவு பெறும் அற்புதமான வித்தையை அறிந்தவர்கள்—அவர்களிடம் ஒரே நாளில் மக்களின் மனதைத் தமது விருப்பத்தின்படி மாற்றி விடக்கூடிய மகத்தான பிரசார சாதனங்கள் உள்ளன. அவர்களின் தாக்குதல், சாமான்யமானதாக இராது! கொடுமை நிரம்பியதாக இருக்கும்! புதுப் புது முறைகள் கையாள்வர், நமது எதிர்ப்பை முறியடிக்க

என்று, விளக்கமாக, ஆளவந்தார்களுக்கு உள்ள வல்லமையை, நிலைமையை, மனப்போக்கை, எடுத்துக் காட்டிப் பேசினார். பேசிவிட்டு, வலிவும் வசதியும் அவர்களுக்கு அதிகம்—நமது நிலைமையோ நலிவும் நடுக்கமும் நிரம்பியது—எனவே, அவர்களை எதிர்த்திட முடியாது, எனவே போரிடலாகாது-வல்லூறை எதிர்த்திடச் சிட்டினால் முடியாது—எனவே சரணடைவோம் — என்று செப்பினாரா! இல்லை! இல்லை! தன் வலி குறைவு, மாற்றான் வலி அதிகம், ஆயினுமென்ன, மறத்தமிழரே! மனவலி உண்டு நமது மரபுக்கு, எனவே, போர் தொடுப்போம் வாரீர்!-என்று அழைத்தார்.

பாதையின் பயங்கரத்தைக் கூறி, எதிர்க்கவரும் படைவரிசையின் வலிமையையும் கூறி, நமது படைவரிசையும் படைக்கலன்களும், உள்ள நிலைமையையும் விளக்கி, எனினும் போர்!—என்று கூறினார்.

காரணம் என்ன? கருத்தற்றோரும் கபட நோக்குடையோரும், கணக்கிடத்தெரியாதாரும், தன்வலிமையைக் கூட்டிக் கூறியும், எதிர்க்கட்சியின் வலிவைக்குறைத்துக்காட்டியும், தன் உடனிருப்போருக்கு, தவறான உற்சாகமூட்டி, களத்தில் துரத்துவர். களமோ அவர்களுக்குக் கலக்க மூட்டும்—தாக்குதலைக்கண்டு திகைப்பர்—படைவரிசை குலையும், சிதறும், தோல்வி வந்துறும். ஆனால் அன்று, பாசறையிலே பேசிய படைத்தலைவர், எதிரியின் கரம் எவ்வளவு வலிவுடன் இருக்கிறது என்பதை ஒளிவு மறைவு இன்றிக் கூறினார்—கூறிவிட்டு, உமக்கு நெஞ்சு உரம் இருக்கிறது, எனவே புறப்படுங்கள் போருக்கு!—என்று அழைத்தார்.

களத்திலே, எவ்விதமான கொடுமை கண்டாலும், இனித் தமிழர் கலங்கமாட்டார்கள்—ஏனெனில், எத்தகைய இன்னலும், அவர்களுக்கு எதிர்பாராததாக இனி இருக்காது—அன்று, மாநாட்டில், விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுவிட்ட காரணத்தால். எனவே, அறப்போரில் இனி ஈடுபட முன்வருவோர், எழுச்சிக் குரலால் மயக்கப்பட்டவர்களாகவோ, தப்புக் கணக்கினால் தள்ளி விடப்பட்டவர்களாகவோ, எளிய முறையிலே நிறையப் பலனைக் காணலாம் என்றவமாளி எண்ணத்தைக்கொண்டவர்களாகவோ இருக்க முடியாது! தெரியும் எமக்கு-இதுவும் இருக்கும்—இதற்கு மேலும் இன்னல் இருக்கும்—ஆனால் எதையும் தாங்க இந்த இதயம் உண்டு—என்று கூறிடும், உள்ள உரம் படைத்தோராகவே, இருப்பர். மாநாடு, இந்த மகத்தான பலனைத் தந்திருக்கிறது.

ஏடுவீசிகள் எவராயினும் சரி, எமது தமிழுக்கு இணையாக எம்மொழியும் இல்லை, என்று எடுத்துரைத்து, தமிழருக்குத் தமிழின் அருமையை அறிவித்து, அறப்போருக்கு அவர்களை தயாராக்கினார், காவியுடை கொண்ட மறைமலை அடிகளார்.

கதரைப்போற்றுபவன் நான்—காங்கிரசை வளர்த்தவனும் நானே—காரிருள் நீங்கிற்று, அடிமைத்தனம் அழிந்துபட்டது—ஆங்கில ஏகாதிபத்யம் ஒழிந்துவிட்டது, என்று களித்தவனும் நானே—ஆயினும் என்ன! என் கன்னித்தமிழை கருத்தற்றோர் அழிக்க முனைவது கண்டு, நானோ வாளாயிருப்பேன், இருப்பவனோ தமிழன், இருந்திடவிடுமோ தமிழ், எனவே தமிழர்காள்! தோழர்காள்! போருக்குப் பறப்படுங்கள்—பொல்லாங்கு எண்ணும் புல்லர்களின் எண்ணத்தில் மண் விழட்டும், புனிதத் தமிழ்நாடு புதுமணம் பெறட்டும், புரட்சி ஓங்கட்டும், புதுமை மலரட்டும், என்று பாட்டு மொழியினால் நாட்டைத் தட்டி எழுப்பிடும் திரு. வி. கலியாணசுந்தரனார், சுந்தரத்தமிழினில், சந்தம்பாடிவிட்டார். சொந்த மொழியினைக்காக்கச் செந்தமிழர் சேனை ஒன்று கிளம்பட்டும் என்று கூறிவிட்டார். முரசு முழங்கிற்று! சிறையில் சிப்பி ஏந்திய சிவஞானம் செப்புவதை, பெருநிலை பெற்றுள்ள, நண்பர்களே! கேண்மின! தமிழ் நமது மூச்சு! அதை அழிக்கும் செயலைப் புரியாதீர்! அறத்தைப் பழிக்காதீர்! அன்பை இழக்காதீர்! ஆங்கிலரின் போக்கிலே, அருமைக் காங்கிரஸ் நண்பர்களே!

சென்று, நீங்கிழைக்காதீர்! இழைப்பது பெரும்பிழை! பிழை கண்டு, நல்வழி புகவாரீர்! இல்லையேல், போர்! போர்! இதனை அறிவித்தோம், தெரிந்துகொள்வீர். முரசறைந்தோம், தமிழர் மூண்டெழுந்தனர் என்பதை முரசறைந்தோம். மூடுபனி விலகட்டும், முந்தையர் மொழி வாழட்டும், எந்தையர் நாடு, எதற்கும் எவர்க்கும் அடிமையாயின்றி, செந்தமிழ்ச் சோலையாய், திகழட்டும்—என்று கனலையும் கனிமொழியையும், எங்ஙனமோ கலந்து, அளித்தார், ம. பொ. சி. நாரணதுரைக் கண்ணன் நய பட நகைமொழி கூறினார் நாடாள்வோருக்கு. மற்றும் பலர்—மதிமொழி கூறினர், மந்திரிமார்களுக்கு. தன மானக் காவலன், திராவிடத்தின் தனி அரசுக்கு வித்திடும் உத்தம உழவன், நமது தலைவர், பெரியார், பரணி பாடினார்—படைவீரர்களுக்கு, போர் நோக்கம், படைபல விளக்கம், களத்தின் நிலைமை, அனைத்தும் தெளிவாகும்படி, உரைத்தார்—உணர்ச்சி உருக்குலைய அல்ல—உற்சாகத்தால் உள்ள நிலைமையை உணராது போய், பிறகு உள்ளம் பதைக்காதிருக்க வேண்டுமென்ற நோக்குடன்! உண்மையை மெருகின்றிக் கூறிவிட்டு, வருக வீரர்காள்! என்று அழைத்தார், வரிசை வரிசையாக நின்ற வீரர்களை அல்ல, குவியல் குவியலாகக் காட்சி தந்த குமரன்களை!! மண்டபமல்ல அது—மாநாடும் அல்ல!! மறத்தமிழரின் பாசறை — உள்ளே, வெளியே, உயரத்தில், இடுக்குகளில், சுவரின்மீது, பலகணி இடையில், பாதைகளிலே, பக்கமிருந்த வீடுகளிலே எங்கும், செந்தமிழ் வீரர்கள் கூட்டம்—எல்லோர்க்கும் முன்வரிசையில் அமர்ந்திருந்தனர், ஆரணங்குகள்! — வீரம் செறிந்த உருவங்கள்! வெற்றியைப் பெற்றிடக் கற்றுக் தரும் காவலன் கண்முன், வீரர்கள், வீரர்கள், உயிரைப் பணயம் வைத்து உரிமைப் போருக்குக் கிளம்பும் வீரர்கள், காட்சியளித்தனர். அதோ, அருணகிரி அடிகள் — துறவி — உடையிலும் உள்ளத்திலும், ஏ! அப்பா! உடற்கட்டு? சேரன் படைக்கோ, பாண்டியன் படைக்கோ ஏற்றதாகவன்றோ இருக்கிறது. அவரைக் கண்டதும், பத்தாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற அறப்போர்க் காட்சிகள், ஒவ்வொன்றாகத் தெரிகின்றன!! அதோ, டாக்டரம்மா—மடிப்பிச்சை எடுத்த மாது — சமயற்கட்டிலே இருந்த தாய்மார்களைச் சிறைக்கு அழைத்துச் சென்ற சேனைக் கலைவி! மூவலூர்மூதாட்டி அதோ! சூட்டுடன் தோற்றமளிக்கும் நாதன—மறியல் செய்து சிறை சென்ற M. A B. L! அனைவரும் உள்ளனர்—ஆற்றலின் அறிகுறிகள்—வீரத்தின் சின்னங்கள்—வெற்றிக்கு ஆதாரங்கள்! காட்சியை எப்படி வர்ணிப்பது, என்று ஏக்கம் பிறக்கிறது — ஆனால் மறுவிநாடி மறைகிறது, அதோ வருகிறார் புரட்சிக் கவிஞர்—காட்சியைக் காண்கிறார், கவிதை உருவாகிறது மனதில். கண்ணொளி நமக்கு அதனைக் கூறுகிறது. முன்பு கூறிய மொழி செவியில் ஒலிக்கிறது, "எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி! — எத்தனை பட்டாளம் கூட்டி வரும்!!

ஆம்! இந்த மக்கள் மன்றத்தைக் கடந்து, இந்தி, எப்பக்கம் வந்து புகுந்துவிடும்? ஏது, வழி! வழி எங்கும், தமிழ் வீரர்களன்றோ உள்ளனர்!!

அதோ, திரு. வி. க. கூறுகிறார் தமிழ், என்று-கேளுங்கள், கடலலை வெட்கும்படியான முழக்கம்—தமிழ் என்ற உடனே, வாழ்க!—என்ற பேரொலி! இந்தி, என்ன செய்யும் —அதைக் கொண்டுவந்து இடர்ப்படும் இங்கிதமற்ற அமைச்சர்தான் என்ன செய்வார்! அவரை உசுப்பிவிட்ட உத்தமர்கள் உள்ளத்திலேதான், எப்படி உற்சாகம் உலராமலிருக்கும்!! தூங்கும் புலியின் வாலை மிதித்துவிட்டோமோ, என்றெண்ணித் துயருற்றனர், தமிழின் பகைவர்கள்!

தீர்மானம் என்ன? இந்திகூடாது —அதனை ஒழித்திடும் நடவடிக்கை எடுக்க ஓர் குழு அமைக்கப்பட்டது. அறப்போர் தொடுத்து விட்டோம் அறிவீர், என்று அமைச்சருக்கு அன்றே அறிவித்தாகி விட்டது. அறப்போருக்கு, நான், நீ, என வந்திடுவோரை, வரிசைப்படுத்தி, வகைப்படுத்தும் முன்னேற்பாடே, மாநாடு. பெரியார் தெளிவாகக் கூறிவிட்டார், இது சலிப்போர்—பதவி பிடிக்கும் சண்டை அல்ல என்று. திராவிடர் கழகம் முன்பே கூறிவிட்டது எமது நோக்கம், அரசாளும் இடம் பிடிப்பது அல்ல, புதிய அரசு அமைப்பது என்று. எனவே, அறப்போரின் நோக்கம், 'பிரகாசம் கோஷ்டி, ராஜாஜி கோஷ்டி' என்பது போன்ற இலாப வேட்டையல்ல—மந்திரிசபையைக் கவிழ்த்து விட்டு மணிமுடியை அபகரிக்கும் மனமாசுடையோரின் சதி அல்ல—சதிச்செயலொன்று நடைபெறுகிறது, இந்நாட்டு நிலையைக் குலைக்க, மக்களின் மாண்பைக் கெடுக்க—அந்தச்சதியை அம்பலமாக்கி, நாடு மீளவும், கேடுதீரவும், காமினி கனி வாழவும், நாடாண்ட தமிழனை நன்னிலைக்குக் கொண்டுவரவுமான, புனிதப்போரின் முதல் கட்டம் இது.

முதலை உண்டபாலனை வரவழைத்த மொழி என்று புராணம் பேசும், வெறும் மொழியைப் புகழும் காரியமல்ல. மொழி, வாழ்க்கைக்கு வழி! தமிழருக்குத்தமிழ், இன்று நேற்றல்ல, இளைத்தும் களைத்துமல்ல, வறண்டும் சுருண்டுமல்ல, வளத்துடன், பல ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. அம்மொழியின் இயல்பினாலும், செயலினாலும், தமிழருக்கென ஓர் வாழ்க்கைமுறை அமைந்திருக்கிறது—வீரத்தைப் போற்றும் வாழ்க்கை முறை—விவேகத்தை வளர்க்கும் வாழ்க்கை முறை—ஜாதியை அறியாத வாழ்க்கைமுறை —பேதம் தெரியாத வாழ்க்கை முறை—சூது வாதறியாதவாழ்க்கை முறை. இந்தப்பண்பாடு, மொழியின் வழிபிறந்தது, இந்தப் பண்பாட்டின் பெட்டகமுமாயிற்று மொழி! அந்த மொழிக்கு அரசவையிலே உயரிடம் இருந்தது! அம்மொழியினால் ஆக்கப்பட்ட அணிபணிகள் பலப்பல உள்ளன.

அம்மொழி, போதவில்லை என்கிறார் அமைச்சர்.

வளமற்ற வேறோர் மொழிக்கு இடமளித்தாக வேண்டும் என்று வாதாடுகிறார் — வாதாடுகிறார்!— உத்தரவிடுகிறார்.

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்!

இல்லையே! ஆதிக்கம் கேட்கவில்லையே—தமிழ்தழைத்தோங்குவதைத் தடை செய்யவில்லையே. பரந்த இந்தியாவிலே பலரும் பேசும் இந்தியைத் தமிழரும் அறிந்திடுதல் அவசியமாகிறது, என்று அமைச்சர் பேசுகிறார். துவக்கத்திலே கூறப்படுவது இதுபோலத்தான்! வலி தெரியாதிருக்க, வாட்டம் குறைய, இரத்தம் சுத்தமாக, கொஞ்சம் மது அருந்துவதை நாகரீகமாகவும் சுகா

தாரமாகவும் கருதிப், பிறகு போதையிலே மூழ்கிடுபவர்போல, ஒரு அயல் மொழியை மெள்ள மெள்ள நுழைய விடுகிறார் அமைச்சர், அது நாளாவட்டத்தில், நமது மொழியைப் பின்னணிக்குத் தள்ளிவிடும், அத்துடன் நமது வாழ்க்கை வழியும் மாறிவிடும். இயல்பு கெட்டு இனமும் கெடும். ஆள்வோரின் ஆதரவுடன், எந்த மொழி புகுந்தாலும், அம்மொழி, பின்னாளில், மற்ற மொழிகளைப் பாழாக்கியே தீரும்.

மொகலாய மன்னரின் தர்பாரிலே முழங்கால் படியிட்டு, உமது ஆதரவு கொண்டு, சிறிதளவு வியாபாரம் செய்து பிழைக்கவே வந்தோம், என்று தான் வெள்ளையர் கேட்டனர் — பிறகோ, ஜாலியன்வாலா படுகொலையைக் கூட, துப்பாக்கி குறுப்பிடிக்காதிருக்கச் செய்வதற்கான பயிற்சி என்று கூறிடும் அளவுக்கு ஆணவ ஆட்சியை அமைத்தனர்—நாட்டை ஆட்டிப் படைத்தனர்!

ஆகவேதான், இந்தி வேண்டாம்—அம்மொழி, ஆரியக் கலாச்சாரத்தைத் தமிழகத்திலே நுழைக்கும் சூது. அதற்கு இடமளிக்காதீர், அரசாங்க ஆதரவு அளியாதீர், அது அவசியமென்றும், வாழ்வழி அதன் மூலமே கிடைக்கும் என்றும் எண்ணுபவர்களும், அதனைக் கற்றுக் கொள்வர்—அதற்கு அரசு நடத்துவோர் ஆதரவு தருவது, ஆகாது என்று கூறுகிறோம். அமைச்சரோ, இந்தியை மட்டுமல்லவே, சமஸ்கிருதம், அரபி, இவைகளிலே ஏதேனும் ஒன்றைக்கூடப் படிக்கலாமே, என் திட்டத்தின்படி, என்று பசப்புகிறார். தமிழ் நாட்டுத் தமிழ் அமைச்சர், தமிழுக்கு ஆதரவு தருவது முறையா, இந்தி, சமஸ்கிருதம், அரபி, இவைகளுக்கு ஆதரவு தருவது முறையா! உத்தமி கண்ணகி உருமாறிப் போகிறாளே, கோவலா! மாதவியை மறந்து, உன்மனைவந்து சேராயா, என்று கேட்டால், மாதவி வேண்டாம் என்றால், அவள் வீட்டருகே உள்ள தேவகியிடம் தொடர்பு கொள்ளட்டுமா, அல்லது பூககியை நாடட்டுமா, என்று கோவலன்கேட்பதா! ஐயனே! அரசாங்க ஆதரவை அளிக்காதீர், அன்னிய மொழிக்கு என்று கூறினால், அமைச்சர், இந்தி பற்றித்தானே பேசுகிறீர், சரி, சமஸ்கிருதம், அரபு, இவைகளுக்கு ஆதரவு தரட்டுமா, என்று கேட்கிறார்.

இந்த வேதனை தரும் விசித்திரத்தை என்னென்பது! இந்தியை எதிர்ப்பது என்ன நோக்கத்துடன், என்பதைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்! மறுத்துவிட்டு, இவருடைய மதி நுட்பமிகுந்த திட்டத்தைச் சரியாகப்புரிந்து கொள்ளாமலேயே, நாம், இந்தியை எதிர்க்கிறோம் என்றுபேசுகிறார்சட்டசபையில்!சட்டசபையில்! மக்கள் மன்றத்தில் அல்ல!!

மாநாட்டிலே, பேசினோர், நமது நோக்கத்தைத் தெளிவுபடக் கூறிவிட்டனர்—அமைச்சர் அறிவுக்கு மதிப்பளிக்கவிரும்பினால், ஆன்றோர் மொழிக்குமதிப்பளிக்கவிரும்பினால், தமிழர் பண்பாட்டுக்கு மதிப்பளிக்க விரும்பினால், தைரியமாகக் கூறிவிட வேண்டும், இந்தித்திட்டத்தைக்கை விட்டுவிட்டோம் என்று. இந்தி எதிர்ப்பை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள குழு, இந்தி, இஷ்டபாடமாகவோ, கட்டாய பாடமாகவோஉயர்நிலைப் பள்ளியில் 4-ம் பாரம் வரையில் இருக்கக் கூடாது— என்று தெளிவாகக் கூறிவிட்டது. அமைச்சருக்குத் தமது தவறைத் திருத்திக் கொள்ள அவகாசம் அதிகம் இல்லை ஆகட்டும் ஒருகைபார்க்கலாம், என்று கிளறிவிடுவோரிடமிருந்து, அவர்களால் என்ன ஆகும், தைரியமாக இருங்கள் என்று தட்டிக்கொடுப்போரிடமிருந்து, அவினாசியார், விடுபட வேண்டும். அவரைச் சூழ்ந்து இருக்கும் பலரில், ஒரு சிலருக்கு, இந்தி இருக்குமா, ஒழியுமா, எனபதில் அல்ல அக்கரை — இந்த மந்திரி சபைக்கு இதனால் ஆபத்து வருமா, இல்லை, வெறும் ஆட்டம் மட்டும் காணுமா, அதனால் நமக்கு என்ன இலாப கிடைக்கும் என்ற இவ்விஷத்தில்தான் அக்கரை, என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தி எதிர்ப்பாளர்களுக்குமந்திரிப் பீடத்தினிடம் மோகம் இல்லை! ஆனால், விடாதீர், இந்தித்திட்டத்தைகைவிடாதீர்—கைவிடுவது கேவலம், என்று தூண்டும்பலருக்கு மந்திரிப்பீடத்திடம் அடங்காத மோகம் இருக்கிறது. அவர்களின் பேச்சைக்கேட்டு, அவிநாசியார் மோசம் போகாதிருக்க வேண்டுகிறோம்.

நமக்கிருக்கும் சக்தி சாமான்யமா! இந்த இந்தி எதிர்ப்பாளர்கள் எம்மாத்திரம்! அவர்கள் ஒரு பத்தாயிரம் பேர் போரிலே ஈடுபடுவார்கள் என்று கேள்விப்பட்டுக் கலங்குவதா, நாடு முழுவதும் நமக்கு ஆதரவு உண்டு, பத்து இலட்சம் பேர் நான் தருகிறேன், என்று பேச, சர்தார்கள் உண்டு! விளைந்ததை வீட்டுக்குக்கொண்டுவர, அரிவாள்மட்டு போதாது, துப்பாக்கியும்தேவை, என்ற அழகான (!) நிலைமையைத் தமதுவட்டாரத்திலே கண்டுவரும் வீராதிவீரர் சர்தார் வேதரத்தினம் கூறுகிறார், ஏ! இந்தி எதிர்ப்பாளர்களே! எங்களுக்கு எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது தெரியுமா! பத்து இலட்சம் பேர் உண்டு எம்மிடம் என்று பேசுகிறார். பத்து இலட்சமல்ல, பெரும்பான்மையோரின் மனதை மயக்கிடும் மகத்தான வல்லமை உமக்கு இருக்கத்தான் செய்கிறது.

ஜெனரல் பிராங்கோவுக்கு இது போனற வல்லமை, பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்துவருகிறது. ஸ்பெயின் நாட்டவரில், பெரும்பாலோரின் ஆதரவு, தமக்கு இருக்கிறதெனத்தான் அவரும் பெருமையுடன் பேசுகிறார்.

அழிவதற்கு முன்தினம் வரையிலே அடால்ப் ஹிட்லருக்கு, அதே நிலைதான் இருந்தது — கருத்தில் வெறியேறிக் கிடந்த ஜெர்மன் காளைகளுக்கு பெர்லின் பித்தன், கண்கண்ட கடவுளாகவே இருந்து வந்தான்.

முசோலினிக்கும், இத்தாலிய நாட்டு மக்களின் பேராதரவு இருந்தது.

பழங்கதை ஏன், இதோ இன்று ஆப்பிரிக்காவிலே டாக்டர் மலானுக்கு, மிக மிகச் செல்வாக்கு— தங்களின் உயர்வுக்கு உழைக்கும் உத்தமர், மலான், என்றே, ஆப்பிரிக்க மக்கள் எண்ணுகிறார்கள்.

ஆனால், உலக மன்றத்திலே, நீதி நேர்மையை மதிப்பவர் முன்பு, அறநெறி அறிந்துரைப்போரின் அவையிலே, அடால்ப் ஹிட்லர், இத்தாலிய இருப்பு உள்ளத்தான், மனுமுறை கண்ட மலான், ஸ்பானியச் சர்வாதிகாரி பிராங்கோ, ஆகியோர்கள், கொடியர் என்றும் கோணல் நடையினரென்றும், வெறியரென்றும் மக்களின் உரிமையைச் சூறையாடும் துஷ்டர்களென்று , கூறப்படுகிறதே ஒழிய அவர்கள் தத்தமது நாட்டவரின் ஆதரவை அளவற்ற முறையிலே பெற்றவர்கள், ஆகவே அவர்களின் செயல், சீலமுடைத்து,

போக்கு, புனிதம் நிறைந்தது, அவர்களை பானிலம் பதித்திடவேண்டும்; என்று எவரும் கூறவில்லை! பொதுமக்களின் பேராதரவைப் பெற்றுள்ளீர்—அறிவோம்—என்ன சொல்லிப் பெற்றீர்? — மக்கள் அதனை மறந்திருப்பர் என்று எண்ணுகிறீர்—பெற்றுள்ள பேராதரவுக்குப் பழுது நேரிடாவண்ணம், பக்குவமாக அதனைப் பாதுகாக்கும் திறம் இருக்கிறது — தெரியும் — ஆனால், இவை இருக்கிற காரணத்தால் உமது செயல்கள் சிலாக்கியமானவைகளாக இருந்தேதீரும், என்று வாதிடுவது சரியல்ல. உமது திட்டத்துக்கு, ஆதரவு நீர், பெற்றுள்ள ஆளவந்தார் பட்டம் என்று கூறிவிடாதீர். பட்டம் நிலையானதுமல்ல, அது இருப்பதாலேயே, குக்கலின் குரலில்ல குயிலோசை இருப்பதாக்கூறினாலும், வெள்ளரியிலே மாங்கனியின் சுவை உண்டென்று கூறினாலும், அல்லியைத் தந்து இந்த மல்லியின் மணத்தைப்பார் என்று கூறினாலும், நாடாள்வோர் கூறுகின்றனர், எனவே ஆமென்று கூறித்தான் ஆகவேண்டும், என்று மக்கள்—அதிலும் மதி எனும் நிதியை இழக்காதவர்கள், தீர்மானிப்பர், என்று எண்ணி ஏமாளியாகாதீர். கோல் கொண்ட இவனுக்கு ஏன் இந்த கோமாளிப் புத்தி! நாடாளவந்தவனுக்கு ஏன் இந்த நாச நினைப்பு! அரசாள வந்தவனுக்கு, ஏன் இத்துணை அறிவுச் சூனியம்! என்றுதான் எண்ணுவர் மக்கள்—நெஞ்சில் உரம் உள்ளோர், விளைவுபற்றியும் வேதனையைப் பற்றியும் கவலை கொள்ளாமல், வெளிப்படையாகவே கூறவும் செய்வர்.

எமது பேச்சை மறுப்பவரை, வேரறுக்கும் ஆற்றல் எமக்குண்டு, என்று பேசுகிறீர். உண்டு! உண்டு! ஆளவந்தார்களுக்கு அறப்போரில் ஈடுபடுபவரை, அந்தமான தீவிற்கு அனுப்புவதற்கும் அதிகாரம் உண்டு—அறிவோம் - கொன்று போடவும், கோல், அதிகாரம் தருகிறது-தெரிந்திருக்கிறோம்- அந்த அதிகாரத்தை, ஆற்றலை, சுலபத்தில் ஒழித்திட முடியாது, அதனையும் அறிந்திருக்கிறோம்-ஆனால் கொள்கையைக் கூறும்போது கோல்கொண்டோர் கொதித்தெழுந்து கொடுமை செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள் என்றால், கொள்கைக்காக, கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளும் திடமனம், தியாக உணர்ச்சி, எம்மவருக்கு உண்டு. பட்டம் பெற்றவர்கள் எம்மை எத்தகைய பயங்கரப் பலி பீடத்துக்கு இழுத்துச் செல்லத் துணிந்தாலும், துணிபவரின் துடுக்குத்தனத்தை தூளாக்கும் அளவுக்கு எமக்கு பலம் இல்லை எனினும், அந்தப் பலி பீடத்தில் 'இரையாகி'விட எமக்கு நெஞ்சுரம் உண்டு-ஆற்றல் உண்டு-கோல்லும் அதிகாரம் பெற்றோரே, எமக்குச் சாகத் தைரியம் உண்டு! சிறையிலிடும் அதிகாரம் பெற்றோரே, அதை நிரப்ப எமக்கு முடியும்! அடக்குமுறை வீசிடும் ஆற்றல் பெற்றோரே. அதனை அமைதியுடன் ஏற்றுக்கொள்ளும் திறம் எமக்குண்டு, வெறியரின் கொட்டத்தை அடக்க, வெறிச் செயலால்தான் முடியும் என்று எண்ணாதீர்-வெறியரின் கோபத்துக்கு இரையாகி, அடக்குமுறைக்கு அஜீர்ணம் உண்டாக்கும் அளவுக்கு, அதன் கோரப் பற்களுக்கிடையே புகுந்து பலியாகும், பண்பு, வெறியரின் போக்கை நிச்சயம் மாற்றக்கூடியது. வெட்ட, குத்த அல்ல; வெட்டுக்கும் குத்துக்கும், மார்பைக் காட்டும் மாண்பினைக் காட்டுவதன் மூலம், தமிழகத்தின் தனிச்சிறப்பை இனி நிலைநாட்டியே தீருவோம். எமது உடலில் அடக்கு முறையால் உண்டாகும் தழும்புகளைக் கண்டு, வெட்கித் தலைகுனிந்து, வெறிச் செயலை விட்டுவிட எண்ணுவீர்-அந்த அளவுக்கு, கொடுமைகளை வரவேற்கத் தயாராகிவிட்டோம். உமது ஆசையும் தீர்ந்து போகட்டும்!!

வெள்ளையர் வீசிய அடக்குமுறைக்கு இலக்காகி நின்றவர்கள், உலக மன்றத்தினரின் செல்லப்பிள்ளைகளாயினர்! உலக உத்தமர்கள், உரிமைக்காகப் போரிடுபவர்களை பரங்கியர் கொடுமை செய்கின்றனர் இது பார் உள்ளளவும் மாளாத பழிச்செயலை அவர்களுக்குத் தருகிறது என்று கூறினர். வெள்ளையரிலேயே சில நல்லவர்கள் வெறி பிடித்த ஏகாதிபத்யமே! தியாகத் தீயிலே தள்ளுகிறாய்தீரரை-நாட்டுப் பற்றுடையோரை உரிமை உணர்ச்சியை அழித்துவிடுவதாக எண்ணுகிறாய், ஆனால் அழிவது அந்த உணர்ச்சியல்ல-அது தணலிலிட்ட தங்கமாகிறது—அழிகிறது உனது ஆணவம் உனது ஆதிக்கம் என்று எச்சரித்தும் வந்தனர்.

அதே பாதையிலே நடந்து போகும் பாக்கியம் பெற்றுவிட்டீர் பழுப்பு நிறப் பரங்கியரே!! பண்புள்ளவர்கள் உமது பாதை எங்கு உம்மை அழைத்துச் செல்லும் என்பதை நன்கு அறிவர். விரைந்து செல்கிறீர், வெள்ளையரை விட வேகமாகச் செல்கிறீர் — அதிகார போதையால் துரத்தப்பட்டுச் செல்கிறீர்—படுகுழியை நோக்கிச் செல்கிறீர்—பலர், இதுபோல் சென்றனர், வரலாறு, பழங்கதை என்றுஎண்ணிவிடாதீர்-அது பண்புடனும் பகுத்தறிவுடனும் நாடாள எண்ணுபவருக்கு, இன்றியமையாத ஆசான் — அதனை மறந்தீர் — ஆர்ப்பரிக்கிறீர்!! — அவினாசியார், சர்தார்களின் ஆர்ப்பரிப்பைக் கண்டு கருத்துக்குழம்பி, தமிழரின் தன்மானத்தை, கலாச்சாரத்தைக்காலால் மிதிக்கக் கிளம்பவேண்டாம், என்று எச்சரிக்கிறோம்.

"செந்தமிழ்க்குத் தீமை வந்த
பின்பும் இந்தத்தேகம் இருந்
தோரு இலாப முண்டோ?"

இந்தப்பாடல், இப்போது, பார்வையாகி விட்டது! தமிழகத்திலே, ஓரளவுக்கேனும், இனப்பற்று, மொழிப்பற்று, உரிமை வேட்கை உள்ளவர்கள், ஒருவரை ஒருவர் பார்க்கும்போது இந்தப்பாடலைத்தான் இவர்களின் விழி, பேசுகிறது. அமைச்சர் இதனை அறியட்டும்—அறப்போர் தொடுத்துள்ளனர் தமிழர்என்பதை உணரட்டும்.

*

12-ம் பக்கத் தொடர்ச்சி

ருந்தாலும் பலன் இல்லை—முளையே கருகிவிடும்.

முளைகண்டு, பயிர் செழிக்கும் என்று நம்பி வேறு வேலையில் ஈடுபட்டாலும், பலன் இல்லை, களை தெம்பி பயிரை அழித்தொழிக்கும்.

ஈரோட்டு உழவு முறை வேண்டும்!! அதுதான் ஆளவந்தார்களுக்குப் பிடிக்காதே!! ஆகவேதான், அறிக்கையை ஆண்டுக்கோர் முறை படித்து, அனைவரும் கூடி ஒருமுறை அழுதுவிட்டு, தமது அரும்பணி அவ்வளவுடன் முடிந்ததாகக் கருதுகின்றனர். அவர்களின் அரிஜன சேவை இந்த இலட்சணத்திலே இருக்கிறது!!

●

அவர்கள் அரும்பணி!

★

'தியாகி'களுக்குத்தர, நிலம் கிடைக்கிறது—அந்தக் காரியம் தங்கு தடையின்றி, நடைபெறுகிறது, ஆனால், ஏழை (அரிஜனனுக்கு) பழங்குடி மகனுக்கு, நிலம், தருவதென்றால், தடைபல—தயக்கம்! காரியம் சுலபத்தில் நடைபெறுவதில்லை!

காஷ்மீரக்களத்திலே, புதிய பாதைகள், அமைக்க முடிந்தது—விரைவில்—தக்க விதத்தில். ஆனால் ஏழை அரிஜனனுக்கு, வீடு கட்டித்தர முடியவில்லை;

அரிஜனங்களுடைய நிலைமை, நாட்டு விடுதலைக்குப் பிறகு, மோசமாகிவிட்டது. விடுதலைபெற்ற பிறகு, நானும் மனிதன்தானே, இந்து சமூகத்தவன்தானே, எனக்கும் மற்றவர்கள் போல, உரிமைகள் உண்டு, அவைகளைப் பெறுவேன், என்று பழங்குடி மக்கள் எண்ணுகிறார்கள். அவர்களுக்கு அந்த உரிமைகள் கிடைத்துவிட்டால், இதுவரை, அவர்களை அடக்கி ஒடுக்கிவைத்திருந்து, மிகமிகக் குறைந்த செலவில் பெற்றுவந்த, உழைப்பு இனிகிடைக்காதே என்று, பண்ணை முதலாளிகள் கவலைப்படுகிறார்கள்—பழங்குடி மக்களுக்கு, சமஉரிமை கிடைக்காதபடி, செய்துவிடுகிறார்கள்.

பல இடங்களிலே, பழங்குடிமக்களுக்கென்று சுடுகாடு, கிடையாது. பிணத்தை எங்கு புதைப்பது என்பது கூட, ஓர் கஷ்டமான பிரச்னையாகி விட்டது. பழங்குடி மக்கள், ஊர்க்கோடியில், வயல்களின் இடையேயும் நடுவேயும் வசிக்கிறார்கள்—அவர்கள், ஊருக்குள், செல்ல, பாதை, சரியாக இருப்பதில்லை, 'உயர்ஜாதிக்காரர்கள்', பொது இடங்களில் அவர்களுக்குப் பாதை தருவதில்லை. இங்கிலேயில், ஓரிடத்தில், பிணத்தை, பொதுச்சுடுகாடு கொண்டுபோக வழியின்றி, சேரியிலேயே புதைத்தனர்!

பழங்குடிமக்கள், பொதுக்கிணறுகளில் தண்ணீர் எடுப்பதைத்தடுக்கக் கூடாது, என்பது சட்டம். ஆனால் நடைமுறையிலேயோ, இதுபோல இல்லை பல இடங்களிலே, பழங்குடிமக்களை, உயர்வகுப்பினர், கொடுமைக்கு ஆளாக்குகிறார்கள். சுகாதாரமற்ற தண்ணீர்த்தேக்கம் போன்ற, குட்டைகளில் நீர்மொண்டு, உண்டு, காலரா போன்ற விஷ வியாதிகளால் தாக்கப்பட்டு, கஷ்டம் அனுபவிக்கிறார்கள்.

பழங்குடிமக்களின் கஷ்டங்களைப் போக்கவும், உரிமைகள் வாங்கித் தரவும், சர்க்கார் சட்டம் இயற்றிய பிறகு, இந்தக் கொடுமைகள் அதிகரித்துவிட்டன.

பழங்குடிமக்களின் நலனுக்கென்று, பிரகாசம் மந்திரிசபையின் போது ஒருகோடி ரூபாய், ஒதுக்கப்பட்டது. ஓமந்தூரார் சபையினர், இதுபோல், பணம் ஏதும் ஒதுக்கவில்லை. அதுமட்டுமல்ல. அந்த ஒரு கோடி ரூபாய் கூடச் செலவிடப்படவில்லை.

பழங்குடிமக்களோ, மக்கள் எண்ணிக்கைக் கணக்கின்படி பார்த்தால், சமுகத்தில் ஐந்தில் ஒரு பகுதி! நியாயப்படி, அவர்களுக்காக, பதினேரு கோடி ரூபாயாவது செலவிட வேண்டும் சர்க்கார். ஆனால நடைமுறையிலேயோ, அவர்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ஒருகோடி ரூபாய்கூட முழுவதும் அவர்களுக்காகச் செலவிடப்படவில்லை.

பழையநிலைமாறவில்லை! கொடுமை ஒழியவில்லை! அவர்கள் வாழ வழி இல்லை! பிழைக்க மார்க்கமில்லை, உழவர்களாக உழல்கிறார்கள் — போதுமான கூலி இன்றி! உழவுக்கு நிலம் இன்றித் தவிக்கிறார்கள்—விவசாயத்துக்குத் தகுந்த நிலம் ஏராளமாக இருந்தும் இவர்களுக்குத் தரப்படுவதில்லை.

வாழவழி இல்லை! பிணமானால், புதைக்கச் சுடுகாடும் இல்லை!!

பெயர் மட்டும் இருக்கிறது புதிதாக! அரிஜன!! பேச்சுமட்டும் பஞ்சமின்றி வழங்கப்படுகிறது, பெரிய தலைவர்களால்!!

உயர்வகுப்பினரால் தங்களுக்குக் கொடுமைகள் இழைக்கப்படும், என்று அவர்கள் அஞ்சி, பாதுகாப்பு தேடும்போது, தக்க சமயத்தில், தக்க விதத்தில், போலீஸ் உதவி கிடைப்பதில்லை. இவ்விதம், உதவி கிடைக்காத காரணத்தால், சில கிழமைகளுக்கு முன்பு, 120 அரிஜனக் குடிசைகள் சாம்பலாயின சிந்தாமணி எனும் இடத்தில்.

* * *

சட்டசபை உறுப்பினர்கள்—பெரிதும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்—பேசினர், மேலே, குறிப்பிடப்பட்டுள்ள விதமாக, 19ந்தேதி. அரிஜன முன்னேற்றத்தைப்பற்றிய, அறிக்கை ஒன்று அரசாங்கத்தாரால் தயாரிக்கப்பட்டிருந்தது. அது பற்றிய, விவாதம் நடைபெற்றபோது, பலர் பேசினர்—அவர்களின் பேச்சின் மூலம், இன்று, பழங்குடி மக்கள் எவ்வளவு பரிதாபகரமான நிலைமையில் உள்ளனர், என்ற உண்மை விளக்கமாகத் தெரிகிறது. ஆளவந்தார்களோ, அரிஜனங்கள் விஷயமாக அபாரமான அக்கரை இருப்பதாகக் கூறுகிறார்கள். நடைமுறையோ இவ்விதம் இருக்கிறது. ஏன், நிலைமை மாறவில்லை?

மக்களின் மனம் மாறவேண்டும், ஏழை அரிஜனங்களைச் சகோதரர்களாக நடத்தவும், சமஉரிமை தரவும், சமூகம் தயாராக வேண்டும் இந்த அறிவு பரவ வேண்டும், இந்த அறிவுத் தெளிவு ஏற்படத் தக்க பிரசாரம நாட்டிலே நடைபெற வேண்டும், என்று ஜாடையாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பிரசாரம் தேவை! பழைய நிலை மாற! புதியநிலை பிறக்க!!

பழங்குடிமக்களின் மீது பூட்டப்பட்டுள்ள பல்வேறு கொடுமைகள், தூளாக்கப்பட வேண்டும், என்ற உணர்ச்சி தரும் பிரசாரம் தேவை!!

மனிதத்தன்மையை வலியுறுத்தும் பிரசாரம் தேவை!

ஜாதிப்பித்தத்தைப் போக்கும் பிரசாரம தேவை! சுருக்கமாகக் கூறுவதானால், சுயமரியாதைப் பிரசாரம் தேவை!

ஈரோட்டு வாடை, வீச வேண்டும்!

வார்தா விதையைத் தூவிவிட்டு, வர்ணாஸ்ரமச் சேற்று நீரைப் பாய்ச்சினால், பயிர் வளராது, பலன் கிடையாது!

வார்தா விதையைத் தூவிவிட்டு, தானாக வளரட்டும், என்று காத்தி

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடஸ்தான்

4-ம் பக்கத் தொடர்ச்சி

எதிரிகளை முறியடித்து இமயமலையுச்சியில் புலிக்கொடி நாட்டிய சேரன் செங்குட்டுவன் பிறந்த நன்னாடு. இன்னும் ஔவை, ஒட்டக்கூத்தர், காளமேகம், ஆசிரியர் சுந்தரம் பிள்ளை ஆகியோர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்து புகழை ஈந்து போனதும் இந்நாடுதான்.

அறிவுத்துறையில் முன்னேற்றமடைந்த தேசமெதுவும் நம் தாய்மொழியைச் சிறிதேனும் கடன்வாங்காமல் அவர்களின் இலக்கியம் வாழ்வடையவில்லை. இனப்பெருமையை ஏற்றிப்போற்றும் சிலப்பதிகாரம், எப்பொருளும் இயம்பும் தொல்காப்பியம், சாகாவரம் பெற்ற திருக்குறள், மானமொன்றே வாழ்வெனக்கொண்ட அகம், புறம் ஆகியவைகளின் இலக்கிய இலக்கணருசியை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ நம்மிடமிருந்தே பெற்றிருக்கின்றன.

இந்நாட்டிலே முடிதாங்கிய பெருநில மன்னர்களும், குறுநில வேந்தர்களும் தங்கள் தாய்மொழி தமிழுக்காக போராடியிருக்கிறார்கள்; ஏராளமான பொற்குவியலைக் கொட்டிக் குவித்துச் செலவு செய்தார்கள். தாய்மொழிப் பற்றுக்காக அவர்கள் உயிர் வாழ்ந்து தியாகமும் செய்தார்கள். தங்களைத் தனித் தமிழர் என்று சொல்லிக் கொள்ளுவதில் அவர்கள் பெருமையடைந்தார்கள்.

இவ்வுலகிலே யுள்ள சில நாட்டாரைப்போல வலிமை கொண்டுள்ள மமதையினால் விளைபொருளுக்கும், பொருளாதாரத்திற்கும் பேராசை கொண்டு நாடு பிடிக்கும் துராசை கொண்டவர்களல்ல தமிழ் நாட்டார்.

அயல் நாட்டிலிருந்து படையெடுத்துவந்த முஸ்லீம் மன்னர்கள் தூரத்திலிருந்தபடியே புலிக்கொடியின் கம்பீரத்தையும், அதன் நேர்மையான நீதி நெறியொழுக்கத்தையும் பார்த்துவிட்டு விலகிப்போனார்கள். அசோகன், சந்திரகுப்தன்முதலிய வேந்தர்களுக்கும் தமிழகம் எட்டாக்கனியாகவேயிருந்தது. ஆனால் ஆரியர்கள் வாழ ஆசைப்பட்டு நம்மை நசுக்குவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் செய்துபார்த்தார்கள். அவர்களுக்குப்பின் வந்த ஆங்கிலேயர்கள் நமைத் தப்பவர் கால்களுக்கிடையில்போட்டு எழும்பவிடாமல்அழுத்தினர். ஆயினுமென்ன? நாம் பூண்டோடு ஒழிந்துபோகவில்லை.

பண்டைத்தமிழகம் இன்றுபோல் சுருங்கி இவ்வளவு குறுகிப்போய் இருக்கவில்லை. வடக்கே இமயமலை அடிவாரத்திலிருந்து தெற்கே குமரிமுனைக்குத் தெற்கிலும் கடல்மேவிய நீண்டநிலம் (மறைந்த லெமூரியா) முழுவதும் இலங்கையுள்பட 'திராவிடம்' என்ற பெயருடன் பெரும் நாடாக இருந்தது என்பதற்குஏராளமான சரித்திரச் சான்றுகள், கல்வெட்டுகள், புதைபொருள் அடையாளங்கள், இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன.

தமிழன் என்றாலும், திராவிடன் என்றாலும் ஒன்றேதான். தமிழர்களாகிய நம்மை திராவிடர் என்று சொல்லிக் கொள்வதின் மூலமே நம்மைப்பற்றி உலகினர்க்கு அறிமுகப்படுத்திக்கொள்ள முடியும். ஏனெனில் அந்நியநாட்டு அறிஞர்கள் நம்மைப்பற்றிச் சரித்திரங்களிலோ மற்றவைகளிலோ,குறிப்பிடும் பொழுதெல்லாம் திராவிடர் என்றே கூறியுள்ளார்கள்.

தமிழன் என்றாலும், திராவிடன் என்றாலும் ஒன்றேதான் என்பதை இன்று நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கவேண்டிய அவசியமே இல்லாமல் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழகமே திராவிடமாக மாறிற்று என்றும் சரித்திரக் குறிப்புகள் பல மலிந்து கிடக்கின்றன.

திராவிடன் (Dravidan) என்ற பதத்திற்கு ஆரியர்கள் அல்லாராகிய தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவு முதலிய மொழியாளர்கள் என்றும், திராவிடம் என்பதற்கு இந்தியாவின் தெற்கிலுள்ள ஒருபழமையான நாடு என்றும் 'சேம்பர்ஸ் இங்கிலீஷ் டிக்ஷ்னேரி'யில் பொருள் எழுதப்பட்டிருக்கிறது.

இலண்டன் மாநகரில், 1904-ல் பிரசுரிக்கப்பட்டு இன்று உலக முழுவதும் வழங்கப்படுகிற "டிக்ஷ்னேரி ஆப் இங்கிலீஷ் லாங்வேஜ்" என்ற ஆங்கிலப்பேரகராதியில் தமிழன் என்பதற்குத் திராவிடன் என்றும், திராவிடம் என்பதற்கு ஆரியரல்லாத மக்களைக்கொண்ட பழம் பெரும் நாடு என்றும் எழுதப்பெற்றிருப்பதுடன் இலங்கையும் திராவிடம் என்றே குறிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும், சுவாமிநாதய்யர், போன்ற ஆரிய அறிஞர்கள் எழுதிப்பிரசுரித்த ஆங்கில அகராதிகளிலும் ஆரியரல்லாத தமிழரே "திராவிடர்" என்று விளக்கப்பட்டிருக்கிறது.

தமிழில் பெரும் புலமை பெற்றவரும் தமிழ்மொழிக்கு 'ஒப்பிலக்கணம்' எழுதியவரும், ஐரோப்பியப் பாதிரியாருமான பேராசிரியர் 'கால்டுவெல்' துரையவர்கள், திராவிட மொழிகளின் தலையாயமொழி தமிழ்தானென்றும் தமிழிலிருந்தே ஏனைய திராவிட மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவு முதலிய மொழிகள் உற்பவமாயிற்றென்றும் ஆராய்ச்சி முறையில் விளக்கியுள்ளார். எனவே, தமிழர்கள் திராவிட இனத்தைச்சேர்ந்தவர்கள் என்பதற்கு வேறு என்ன ருசு வேண்டும்?

இதனால்தான்நமது மாபெருந்தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நம்மைப் பிராமணரல்லாதார் என்று சொல்லிக்கொள்வதைவிட, திராவிடர் என்றும் திராவிடவிடுதலை இயக்கத்தார் என்றும் ஜஸ்டிஸ் சுயமரியாதைக் கட்சிகளுக்குப் புதிய பெயர் கொடுத்து திராவிடநாடு 'திராவிடருக்கே!' என்ற குறிச்சொல் தோற்றத்தையும் முழக்கிவைத்தார்.

*

"சமய போதனையும் சமயாநுஷ்டானமும் இன்றுள்ள முறையில் ஒற்றுமையை வளர்க்காமல் சச்சரவுகளுக்கே இடமாகின்றன. ஆகவேதான் வார்தாக் கல்வித் திட்டத்தில் சமயங்களைப் பற்றிய பயிற்சியைச் சேர்க்கவில்லை.

காந்தியார்.

“சீண்டிவிடுகிருர்!
குட்டையைக் குழப்புகிருர்!
குட்டிச் சுவராக்குகிருர்!
மானபங்கம் செய்கிருர்!

கல்வி அமைச்சர்மீது வீசப்படும் கண்டனங்கள் இவை!!”

“ஆமாம்—அவர்களுக்கு வேறு என்னவேலை! கண்டகண்ட விஷயங்களையும் கண்ணை மூடிக்கொண்டு கண்டிப்பார்கள். வம்பர்கள், இந்தக் கருப்புச்சட்டையினர். அவர்கள் கல்வி அமைச்சரைக் கண்டிப்பது பற்றிக்கவலை வேண்டாம்.”

“இப்படிப்பேசி, பிரச்னையின் முக்யத்துவத்தை மறந்து விடாதீர் நண்பரே! கண்டனச் சொற்கள் கருப்புச்சட்டையினருடையன அல்ல—கதர்ச்சட்டையினரின், பேச்சு!”

“காங்கிரஸ் காரரா, இப்படிக் கண்டிக்கிருர்!”

“ஆமாம்—காரசாரமாக!”

“ஏன்?”

“ஏன்! அதுதான் நியாயமான கேள்வி! கருப்புச்சட்டைக்காரர் கண்டிக்கிறபோது, காட்டும் அலட்சியம், அல்லது ஆத்திரம், இங்கு ஆகாது. இது, காங்கிரஸ் மந்திரியின் திட்டத்தைக் காங்கிரசாரே, கண்டிக்கும் சம்பவம்”

“ஏன், இவ்விதம், கண்டிக்கிருர்”

“ஏனு! ஏனென்ருல், இந்தக் காங்கிரஸ் நண்பருக்கு, காங்கிரஸ் மந்திரி செய்யும் சகல காரியத்தையும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்வது, அறிவற்ற, ஆபத்தான செயல் என்று தெரிகிறது. கல்வி பெரிது, காங்கிரஸ் மந்திரியைவிட! —என்று புரிகிறது. எனவே தான், கல்வி அமைச்சரின் இந்தித்திட்டத்தைக் கண்டிக்கிருர்.”

“எங்கே பேசினுர்—எப்போது?”

“பேசவில்லை! — எழுதினுர்!— சிவாஜி எனும் காங்கிரஸ் ஏடு—திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவருவது, அதிலே உள்ள கண்டனம். முழுவதும், படி — கொஞ்சம் மூடு பனி விலகும்.”

* * *

இந்தியே வேண்டாம்

“தமிழ் நாட்டில் ஹிந்திக்கு இருந்து வரும் பலமான எதிர்ப்பை சம்பந்தப்பட்டவர்கள் “அசட்டுத்தனம்” என்றும் “அறிவின்மை” யென்றும் கண்டித்து வருவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனுல் இப்படிக் கண்டிப்பதற்குத்தகுதியானகாரணங்களை யாரும் எடுத்துக் கூறவில்லை.

ஹிந்தி எதிர்ப்பாளர்களுக்கு தேசியப்பற்று இல்லை யென்றும், அவர்கள் வகுப்பு வாதிகளென்றும் பலர் கண்டிக்கிருர்கள். ஹிந்தியை எதிர்க்கும் பெருமபாலான மக்களில் வகுப்புவாதிகளும் கலந்திருக்கலாம். ஆனுல் வகுப்பு வாதிகள் இல்லாதவர் தொகைதான் அதிகம் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தவிரவும் வகுப்புவாதிகள் ஒரு திட்டத்தை எதிர்க்கிருர்கள் என்பதனுல் அந்தத் திட்டம் நியாயமான திட்டம் என்று ஆகிவிட முடியாது.

ஹிந்தி எதிர்ப்பு அறிவின் ஆராய்ச்சியால் ஏற்பட்ட எதிர்ப்பல்ல, உணர்ச்சி வயப்பட்ட எதிர்ப்பு என்று சிலர் அங்கலாய்க்கலாம்.

ஆனுல் அவர்கள் இன்னெரு பேருண்மையை மறந்து விடக்கூடாது. ஹிந்தி எதிர்ப்பில் கலந்திருக்கும் மொழியுணர்ச்சியைப் போன்ற உணர்ச்சி அடிப்படையில் தான் இந்தியாவுக்கு ‘தேசிய’ப் பொதுமொழி வேண்டும் என்ற கொள்கையும் உருவாகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஆங்கிலம் வேற்ருன் மொழி; அதை அகற்றிவிட்டு நம் சொந்த மொழியொன்றை தேசியப் பொது மொழியாக்க வேண்டும் என்று மாத்திரம் கூறலாம்!

ஆனுல் தமிழ் நாட்டில் ஹிந்தி வேண்டாம், அது வடக்கத்தியார் மொழி என்று மாத்திரம் கூறக் கூடாது!

இந்தக் கூற்றை யாராவது ஒப்புக் கொள்ள முடியுமா?

வடக்கத்தியார், தெற்கத்தியார் பேதம் தவறுக இருக்கலாம். ஆனுல் ஆங்கிலேயன், இந்தியன் பேதமும் அப்படித்தான் என்ருல் “தேசியவாதிக்கு” அது கசப்பாகத் தோன்றும்.

கண்டிப்பதானுல் எல்லா இன உணர்ச்சிகளையும் ஒருமிக்கக் கண்டிக்கவேண்டும். இல்லாவிடில் எல்லா இன உணர்ச்சிகளுக்கும் நியாயமான மரியாதை செலுத்தவேண்டும்.

அறிவும், ஆராய்ச்சியும் தேவையான அரசியல் விஷயங்களில் உணர்ச்சிகளை விட்டு விடுங்கள், அவை வேண்டாம் என்றுதான் கூறுகிறோம்.

உணர்ச்சி கூறுகிறது, ஆங்கிலம் வேண்டாம், அது வேற்று மொழி யென்று. அதேஉணர்ச்சிதான் ஹிந்தி வேண்டாம் அதுவும் வேற்றுமொழி என்று கூறுகிறது.

ஆனுல் அறிவு கூறுகிறது, ஆங்கிலம்தான் இந்தியப் பொதுமொழியாக இருக்கத் தகுதியுள்ளது, அதை ஏற்றுக்கொள்வதில் தேசிய விரோதமான குந்தகம் ஏதுமில்லை, என்று.

சென்னைக் கல்வி மந்திரியாரின் தற்போதைய திட்டத்தின் குறைகள் தெளிவானவை. இந்தத் திட்டத்தில் ஹிந்திக்கும் மரியாதையில்லை. கல்விக்கும் மரியாதையில்லை. நடைமுறை லாபமுமில்லை.

ஆங்கிலத்தை மூன்ருவது மொழியாக்கி அதைஇரண்டாவது பாரத்திலிருந்து கற்க ஆரம்பிக்கச் சொல்லுகிறது இத்திட்டம். ஹிந்தியைமறைமுகமாகக் கட்டாய இரண்டாம் பாடமாக்கி அதையும் இரண்டாவது பாரத்திலிருந்து கற்கச் சொல்லுகிறது இத்திட்டம்.

இப்படிச்சேர்ந்தாற்போல்இரண்டு மொழிகளை காலம் கடந்த காலத்தில் அகரத்தில் ஆரம்பித்துப் புதிதாகக் கற்கச் சொல்வதைப் போன்ற கொடிய தவறு ஏதாவது இருக்க முடியுமா?

மத்திய அரசாங்கமும், வேறு மாகாண அரசாங்கங்களும் சீண்டாத கல்வித்துறையை நமது மாகாண சர்க்கார் மாத்திரம் ஏன் அவசரப்பட்டுச் சீண்டி குட்டையைக் குழப்பவேண்டும்?

இந்த அவசர மாற்றங்களைக் கிழித்தெறிந்து நெருப்பு வைத்துப்

(16-ம் பக்கம் பார்க்க)

செச்சே!
இதை எல்லாமா படிப்பது!

ஒரு ருசிகரமான சம்பவம்! சின்னாட்களுக்கு முன்பு, முதலமைச்சர் ஓமந்தூரார், மராமத்து இலாக்கா அதிகாரிகளின் போக்கை மிகமிகக் கண்டித்துப் பேசினார்.

மராமத்து இலாக்காவுக்கு, கனம். பக்தவச்சலம் மந்திரி!

தம்முடைய இலாக்காவைப்பற்றி, முதலமைச்சர், மிகப் பலமாகக் கண்டித்துப் பேசியது, கேட்டு, கனம். பக்தவத்சலம், பதில் ஏதும் கூறவில்லை.

மெயில் பத்திரிகை, இவ்விதம் ஒரு மந்திரியின் இலாக்காவைப் பற்றி முதலமைச்சர், கண்டித்துப் பேசியது, முறையல்ல, என்று குறை கூறிற்று.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாளிட்ட கதைபோல, இதற்குப் பதில் கூறும் முறையில், முதலமைச்சர் தமதுபழைய குற்றச்சாட்டை வலியுறுத்தினார், மீண்டும்.

இவ்வளவையும் படித்த மக்கள், மராமத்து இலாக்காவைப் பற்றி, என்ன கருத முடியும்?

சட்டசபையிலே, ஒரு உறுப்பினர், மராமத்து இலாக்கா மந்திரி, கனம். பக்தவத்சலத்தை, "முதலமைச்சர், மராமத்து இலாக்காவைப் பற்றிக் கண்டித்துப் பேசினாரே, பத்திரிகைகளில் வெளி வந்ததே, அதுபற்றித் தங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்.

மராமத்து இலாக்கா, உண்மையாகவே கண்டனத்துக்குரியது என்றால், மந்திரியார், முதலமைச்சரின் மொழிகளை ஆதரித்துப்பேசி, "ஆம்! உண்மைதான்! அந்தஇலாக்காவுக்கு முதலமைச்சர் 'கொடுத்தசூடு' நியாயமானதுதான். அவருடைய கண்டனம், அந்த இலாக்காவைத் திருத்தட்டும்."—என்று கூறியிருக்கலாம்.

அல்லது, மராமத்து இலாக்கா மாசற்றது, முதலமைச்சர், கூறியது சரியல்ல, என்று கூறி, தன் இலாக்காவின் நன்மதிப்பைக் காப்பாற்றியிருக்கலாம்.

இரண்டில் எதுவும் செய்யாமல், கனம் மந்திரியார், "நான், அது சம்பந்தமாகப்பத்திரிகையில் வெளிவந்தவிஷயத்தைப் படிக்கவில்லை" என்று பதிலளித்திருக்கிறார்!!

எவ்வளவு வேடிக்கை, பாருங்கள்! பேசினவர், முதலமைச்சர்! பேசப்பட்ட விஷயம், இவருடைய ஆதீனத்தில் உள்ள இலாக்காவைப் பற்றி. ஆனால், இவர், அதுபற்றி, பத்திரிகையில் வெளிவந்த விஷயத்தைப் படிக்கவில்லையாம்!!

பொறுப்புணர்ச்சி, இவ்விதம் இருக்கிறது மந்திரியாருக்கு!!

ரோஷ உணர்ச்சி, இந்த அளவுதான் இருக்கிறது, மராமத்து இலாக்கா மந்திரியாருக்கு.

மிக மிக அவசரமாக அவர், தமது இவ்வித மனப் போக்கை, மராமத்துச்செய்துகொள்ளவேண்டுகிறோம். மக்களின் சார்பில ஆட்சிப் பீடத்தில் அமருபவர், தமது அலுவலைப்பற்றி, தமது இலாக்காவின் வேலைகளைப் பற்றி, மக்கள் என்ன எண்ணுகிறார்கள்-என்று கண்டறிய வேண்டியது, கடமையாயிற்றே! கண்டறிந்தால்தானே, தமது சேவையின் சிறப்பைத், தானே உணர முடியும்!! நாம் செய்கிற காரியம் நியாயமானது—மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது, என்பதை அறிய முயற்சிக்காத அமைச்சரை, நாம் என்ன அடைமொழியிட்டு அழைப்பது. மக்களின் கருத்தை அறிய வேண்டிய அவசியமில்லை, என்று, மமதை பிடித்த மன்னர்கள் எண்ணலாம், மதிமிக்கமந்திரியார், எண்ணுவதா!

மக்களின் மனதை எடுத்துக் காட்டத்தானே ஏடுகள் உள்ளன—நாடாள வந்தவர்—தான் சம்பந்தப்பட்ட விஷயத்தைப் பற்றி ஏடு, எழுதியதை, நான் படிக்கவில்லை என்று கூறுவது, பொருத்தமான பதிலா — பொறுப்புள்ள பேச்சுத் தானா!

இவரை, அந்த அங்கத்தினர், எந்தச் சினிமாவில் என்ன ஆட்டம் காட்டப்படுகிறது, பத்திரிகையில் பார்த்தீரா, என்று, கேட்டார். கேட்டிருந்தால், மந்திரியார்,மார்பை முன்னுக்குத் தள்ளியபடி, கூறலாம், நான் அவ்விதமான விஷயங்களைப் படிப்பதில்லை என்று! சபாஷ்! சரியான சூடு கொடுத்தார் மந்திரியார், என்றுமகிழ்ச்சியுடன்நாமும்கூறலாம். அங்கத்தினர், கேட்டதோ, அலட்சியப் படுத்தக்கூடிய விஷயத்தை அல்ல — அமைச்சரின் கவனத்திலிருக்கவேண்டிய விஷயம்—அவருடைய இலாக்காவைப் பற்றி, பத்திரிகையில் வெளி வந்த அபிப்பிராயத்தைக் குறித்துக் கேட்டார்—பத்திரிகைக்காரரே வெளியிட்ட அபிப்பிராயமும் அல்ல—எதிர்க்கட்சியினரின் அபிப்பிராயமும் அல்ல—இவருடையகட்சியினர், முதலமைச்சர், வெளியிட்ட கருத்தைப்பற்றிக் கேள்வி கேட்கிறார், சட்டசபையில், அதற்கு பதில் என்ன தருகிறார், பொறுப்புள்ள மந்திரியார், நான் அதைப் படிக்கவில்லை!!

அவ்வளவு அலட்சியம்!! கனம் மந்திரியாருக்கு, இந்த விஷயங்கள், மிக மிக இலேசானவை-முதலமைச்சரின் மொழி—தன் இலாக்காவைப் பற்றிய கண்டன மொழி, இவருடைய, மேலான பார்வையிலே படவே இல்லை!! முதலமைச்சரின் கண்டனம் மராமத்து மந்திரியாரின் மகத்தான பல அலுவல்களுக்கிடையே, எம்மாத்திரம்!! பாலம் கட்டுவதற்குத் திட்டம் தீட்டுவது முதற்கொண்டு, பாடலியின் படத்தைத் திறந்துவைப்பது வரையில், பலப்பல, பணிபுரியும் பக்தவத்சலனாரின் பார்வைக்கு, அவருடைய இலாக்காவை, முதலமைச்சர் கண்டித்த விஷயம், படவில்லை!!

இந்த இலட்சணத்தில், கனம் பக்தவத்சலம், மராமத்துக்கு மட்டுமல்ல, மக்களின் மனதை அறியவும், மக்களுக்குச் சர்க்காரின் மனதைத் தெரிவிக்கவும் அமைந்துள்ள பிரசார இலாக்காவுக்கும் மந்திரியார்! என்றாலும் கூட, அவர் படிக்கவில்லையாம், பத்திரிகைகளில், வெளி வந்த விஷயத்தை!! மந்திரியார், பஞ்சாங்கத்தைப் பார்த்து, புறப்பாட்டுக்கு நாள் பார்ப்பதும், டைரியைப் பிரித்து, வரவேற்பு வைபவங்களைப் பற்றிக் குறித்துக் கொள்வதும், கணக்கு ஏட்டைப் பிரித்து, வரவு இவ்வளவு செலவு இவ்வளவு என்று எழுது

வதும், போதும் என்று எண்ணுகிஞர் போதும்! அமைச்சரே! அமைச்சர்களின் அலுவல், இவ்வளவோடு முடிந்து விடவில்லை!! நாட்டு மக்களின் மனப்போக்கை அறிய, முயற்சிப்பதும், முக்கியமான அலுவல், உமது இலாக்காவைப்பற்றி, உமது முதலமைச்சர், ஸாரியப் பேசினுர்—நீர் கூறுகிறீர், நான் அதைப் படிக்கவில்லை என்று. கோபியாதீர், உமது பதவியை எண்ணி, யாரும், எதிரிலே ஒன்றும் கேட்கமாட்டார்கள், ஆனால் எவரும், "இதைக் கூடப்படிக்காமல், என்னய்யா இந்த ஆசாமி செய்கிஞர்! மலையைப் புரட்டிக் கொண்டிருக்கிறாரா?" என்று கூறுவர்—மக்கள் உமது, பதிலுரையைக் கேட்டு, என்னென்ன பேசுவர் — ஓய்வு கிடைக்கும் போது சிந்தித்துப் பாரும்.

"ஏண்டா, உப்பு குறைவாக இருக்கு?"

"கவனிக்கலிங்க"

"துரைக்கு, இதைவிட வேறு என்னவாம் வேலை! உப்பு சரியா இருக்கா, காரம் சரியா இருக்கான்னுகூடக் கவனிக்காமே, சமயற்கட்டிலே என்னடா வேலை!"

அமைச்சரே! உமது சமயற்காரரிடம், இதுபோலப் பேசினதில்லையா!

வேகமாக மோட்டாரை ஓட்டிக் கொண்டு போய், வேறு வண்டிமீது மோத இருந்த போது, மோட்டார் டிரைவரைக்,

"கண்ணிலே என்னடா இருக்கு! எதிரே வருவது கூடத்தெரியவில்லையா! மோட்டார் ஓட்ட வேண்டாப்பா வர வேணும், இப்படிப்பட்ட குருட்டுக்கண்ணன்"

—என்றெல்லாம் கேட்டிருக்க மாட்டீரா!

நாட்டு மக்களையும், முதலமைச்சரையும், அவ்வளவு அலட்சியமாக எண்ணுகிறீர், மக்களின்மனம், முதலமைச்சரின் கருத்துரை, இவைகளைப்பற்றி, உமக்குக் கவலை இல்லை —இவைகளை வெளியிடும் இதழ்களைப் படிக்க நேரம் இல்லை — நினைப்பு இல்லை — அவசியம் என்றும் தோன்றவில்லை. மந்திரிவேலை என்றால், இப்படிப்பட்ட விஷயங்களைப் படிக்கக் கூடாது, அந்தஸ்த்துக் கெட்டு விடும் என்று எண்ணுகிறீர்போலும். அழகல்ல, அமைச்சரே! அழகல்ல இந்தப் போக்கு; சரியல்ல; அறிவுடைமையுமல்ல!

செச்சே! இதை எல்லாமா படிப்பது!! என்று அலட்சியமாகக் கருதாதீர் — கருதினால் மக்களும், செச்சே! இவர்களெல்லாமா நமக்கு மந்திரிகளாக இருப்பது, என்று கருதுவர் — நல்லதல்ல பாருங்கள், அந்நிலை—நட்பு முறையில் கூறுகிறேன் — நாட்டையும் கவனித்துக் கொள்ளுங்கள், மந்திரி வேலையுடன் வேலையாக!!

●

இந்தியே வேண்டாம்

14-ம் பக்கத் தொடர்ச்சி

பொசுக்கிவிட்டுப் புதிய திட்டங்கள் வகுக்க நிதானமாக ஆரம்பிக்கலாம் என்று சென்னை அரசாங்கத்துக்குக் கூறுகிறோம்.

மொழி விஷயத்தில் மாத்திரமல்லாமல் கல்வித்துறையில் சென்னை அரசாங்கம் புகுத்திவரும் புதிய மாற்றங்களும் வரவேற்கத் தக்கனவாயில்லை. இவை நமது மாணவர் குழாமைக் குட்டிச்சுவர்களாக்கி நாசப்படுத்திக்கல்வியை மானபங்கம் செய்து வீணாக்கிவிடும்.

ஹிந்தி விஷயமாகப் பின்வரும் புதிய திட்டத்தைப்பற்றி சிந்திப்பது நலம் என்று தோன்றுகிறது. இந்தத் திட்டமும் ஆராய்ச்சிக்குரிய திட்டம் தான்.

ஹிந்தி ஆங்கிலத்தின் ஸ்தானத்தை வகிக்கத் தகுதியற்றது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாதெனினும்,

மூன்றாவது மொழியை எடுத்து விட்டு ஹிந்தி, ஆங்கிலம் இரண்டை மாத்திரம் இரண்டாம் மொழிகளாக்கி இந்த இரண்டாம் மொழி ஏதாவதொன்றைப் பெறுக்கிக் கொள்ளும் வசதியை யளித்து முதல் பாரத்திலேயே புகுத்திப் பரிசோதனை செய்து பார்க்கலாம்.

இந்தப் பரிசோதனையின் மூலம் இந்தியப் பொது மொழியாக ஹிந்திக்கு அருகதையிருக்கிறதா, ஆங்கிலத்துக்கா என்ற உண்மை புலப்பட்டுப்போகும்.

ஹிந்தியைப் பற்றியே மறந்து விடுவதானால் இந்தத் திட்டம் தேவையேயில்லை. பேசாமல் ஆங்கிலத்தை மாத்திரம் கட்டாய இரண்டாம் மொழியாக்கலாம்.

எனவே ஆங்கிலத்தைக் கட்டாய இரண்டாம் மொழியாக்கி, மூன்றும் மொழி ஏதும் இல்லாமல் ஆங்கிலத்தைக் கீழ்க்கூடையிலேயே புகுத்தி விட்டால் அதுவே மிகச் சிறந்த முறையாயிருக்கும்."

(சிவாஜி)

18—7—48

செங்கல்பட்டு ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டு.

S. C. O. P. 47—48

ஷை நெம்பரில் செங்கல்பட்டு தாலுக்காசுரேத்திரியம்நெல்வாகிராமத்தில் காலஞ்சென்ற ஜெக்கியா பீபிக்கு சேரவேண்டிய பேரம்பாக்கம் மருதியின் யோமியாபணம் ரூ 660—7—11 வசூலிக்க ஷை ஜெக்கியாபீபீன் குமாரார்கள் குமாரத்திகளான காஜாபுரான் சாயபு 1, காஜா இப்ராஹீம் சாயபு 2, காஜா நூருல்லா சாயபு 3, காஜா அப்துல் காதர் சாயபு 4, பீஜானபீபீ 5, ஆஷாபீபீ 6, அமிருபீபீ 7, கதிஜா பீபீ 8, குளியன்பீபீ 9, இவர்கள் வாரிசு மனுபோட்டிருப்பதினால் ஷை மனு 2—8—1948-ல் காலை 11—மணிக்கு விசாரணைக்குவரும் என்று இதனால் தெரிவிக்கலாயிற்று.

பூண்டி-பார்த்தசாரதி

மனுதார் வக்கீல்

செங்கல்பட்டு 15—7—48

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street, Conjeevaram.